தத்துவபோதினி.

சென்னைப்பட்டணம் கஅசுஉவு ஜஒன்மீ எடை. [இல. உ.

கலியாணி ராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

மெய்யறிவின்பக்கடவுளே - எந்தன் - பொய்யறிவாற்றுநற்பொருளே.

அனுபல்லவி.

ஓரொழுத்துக்குள்ளும் அடங்கியிருக்கும்மூர்த்தி
பேருலகங்களெல்லாம் கடந்துபரவுகின்ற...(மெய்யறி.)

சரணங்கள்.

க. உண்ண உணவுமற்று உடுக்கத் துணியுமற்ற
எண்ணிலலா உயிர்கள்போல் அலைய்யாமல் சுகமாக
மண்ணிலெந் தனைக்காத்து மக்களிற்சிறப்பித்து-
தண்ணருள் தழைக்கின்ற தாயுந்தந்தையுமான...(மெய்யறி.)

உ. சருப்பையுள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்-
விருப்புற் றமுதளிக்கும் விலகாத் தொழிலேப்பெற்று-
விருப்ப மனந்தனிலும் அருந்த வெளிதனிலும்-
இருப்பா யென்வாக்குக்கும் மனதிற்குமெட்டாத...(மெய்யறி.

கூ. பலபக்க மிழுக்கின்ற பாவத் தொழிலினின்றும்-
விலகமன தளித்து விபரீத மின்றிக்காத்தி வ-
வுலகவின்ப முடிந்தால் உன்னடியில் தேங்குகின்ற-
அலகிலாக் கருணையில் ஆழவென்னை முழுத்தும்...(மெய்யறி.)

அட்டவணை.

விஷயங்கள்.	பக்கம்.
கடவுள்துதி.....	கஙூ
விளம்பரம்.....	கஙூ
தத்துவடொதினி.....	கடு
கடவுளிருப்பு.....	கக
அர்த்தசாஸ்திரம்.....	உஉ
பிரகிருதிசாஸ்திரம்.....	உஙூ
உபநிஷத்து.....	உஎ
லார்ட்டுபேகன் வியாசம்.....	உசு
பழமொழிகள்.....	ஙூ0
வர்த்தமானக்குறிப்பு.....	ஙூ0

விளம்பரம்.

நம்முடைய தேசத்தாரின் விஞ்ஞான விருத்தியின்பொருட்டு சேலத்திலிருக்கும்-ம-ா-ா-ஸ்ரீ. பி. கோவிந்தசாமி செட்டியார் கஅசுஙூஉவு நவம்பர்மீ கசுஉயுள்ள விளம்பரத்தால் சேலம் கல்விக்களஞ்சியம் என்னும் பெயருடைய ஒரு பத்திரிக்கையை மாதந்தோறும் தமிழிலதாம் பிரசித்தப்படுத்த நிச்சயித்திருக்கிறதாய் பிரேபித்தது பலருக்குந் தெரிந்திருக்குமல்லவா? அந்தப்பத்திரிக்கை(அ)

அங்குலநீளமும்(நு)அங்குல அகலமுமுள்ளதாயும் அதில் நம்முடையவும் யூரோப்பியர்களுடையவும் நூல்களின் சாரங்களும். ஆசார, வியவஹார, கோட்பாடுகளைக்குறித்த சுருக்கமான பிரசங்கங்கள் அடங்கியும், இருக்கவேண்டுமென்று அவர் உத்தேசித்திருந்தார்.

இப்பால் சென்னைப்பட்டணத்தில் வேதஸமாஜம் ஏற்பட்ட உடனே அவர் எடுத்த இந்த யத்தனத்தை முடிப்பதை அந்த ஸமாஜத்தார்வசத்தில் விட்டுவிட்டார். ஆதியில் அந்த பத்திரிகைக்கு அவர் உத்தேசித்த பெயரைமாற்றி நாங்கள் தத்துவபோதினியென்கிற பெயரை அதற்கிட்டு அவர் பிரேரேபித்த விஷயங்களோடு நம்முடையவர்கள் விரும்பத்தக்க கொஞ்சவர்த்தமான சங்கிரகத்தையும் சேர்க்க நிச்சயித்தோம்.

நமது தேசத்திலுள்ள மதத்தார்களில் யாருக்காவது மனம் நோவும்படியான வாக்கியங்களை இதில் பிரயோகப்படுத்துவதில்லையென்று நாங்கள் உருதியாய்ச் சொல்லுகிறோம்.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்திலுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்து பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....க - கஉ - 0

முதலெடுப்பில் இந்த பத்திரிகை விசேஷமாய் செலவாகாதென்றும், இது சாசுவதமாய் நடந்துவரும் பொருட்டு கொஞ்சம் முதல்சேர்ப்பது உசிதமென்றும்யோசித்து சில பங்குகளை ஏற்படுத்தினோம்.

க. பிரகிருதத்தில்-க00-பங்குகளுக்கதிகப்படாமலிருக்க வேண்டியது. பங்கொன்றுக்கு விலை உ0 ரூபாயாக விருக்கவேண்டியது.

உ. இந்தப் பங்குகளை ஹிந்துக்கள் தவிர மற்றவர்களுக்குக் கொடுக்கத்தக்கதில்லை.

ங. பங்குத்தொகையைச் செலுத்தியபிறகுதான் அதற்குக் கையொப்பம் செய்தவர்கள் பங்குக்காரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

ச. ஒருபங்கு வாங்கியவருக்கு ஒரு பிரதியும், இரண்டுபங்குகள் வாங்கியவருக்கு இரண்டு பிரதியும், அதற்கதிகம் வாங்கியவருக்கு மூன்றுபிரதியும், என்றென்றைக்கும் சாசுவதமாய் வேறுசந்தாஇல்லாமலே கிடைக்கும்.

ஞ. ஆதலால் பங்குக்காரர்கள் சென்னைப்பட்டணத்துக்கு வெளியிலிருக்கும் பக்ஷத்தில் ஒரு பிரதிக்குடையவர் வருஷம் ஒன்றுக்கு அரைரூபாய் வீதமும், ஒன்றுக்கு அதிகபிரதிகளுடையவர் வருஷம் ஒன்றுக்கு முக்கால் ரூபாய்வீதமும், தபால்செலவுக்காகக் கொடுக்கவேண்டும்.

சந்தாக்களும், தபாலுகூலிகளும், அந்தந்த வருஷத்தில் முன்பணமாய்ச் செலுத்தப்படவேண்டும், வருஷ நடுவில் வாங்கத் தொடங்குவோருக்கு அவற்றில் யாதொருபாகமும் தள்ளிக்கொடுக்கப்படாது.

இதற்குமுன்பே கையொப்பம்செய்த கல்பா சேலத்திலுள்ளவர்கள் முதல்வருஷத்துக்கு தபால்கூலிகொடுக்கவேண்டியதில்லை,

இந்த சென்னை தத்துவ போதினியை வாங்க மனமுடைவர்கள் மயிலாப்பூரில் வேதஸமாஜத்தின் காரியதரிசியாகிய-ஹைகோர்ட்டு வக்கில். வ. இராஜகோபாலாசாரியருக்கு, எழுத்து மூலமாய்த் தெரிவித்துக் கோள்ளவேண்டியது.

இந்தப்பத்திகையின் சந்தா தார்களும், பங்குக்காரர்களும், இடம்மாறும் போது அந்த விவரத்தை தயைசெய்து காரியதரிசிக்குத் தெரிவிக்கவேண்டியது.

இந்தபத்திரிகையின் முக்கிய உத்தேசியம் ஞானவிருத்தியே யல்லாமல் சமாசாரப் பிரவசனமல்ல. நமது தேச

பாஷைகளிலுள்ள நூற்களெல்லாம் முக்கியமாய் செய்யுளாயிருப்பதால் சிரான வசனநடை இனிமேல் ஏற்படவேண்டியதா யிருக்கிறது. சுத்தத்தமிழா யெழுதினால் பலருக்கு அர்த்தமாகாது, சமஸ்கிருதத்தை விசேஷமாய்க் கலந்தால் பலருக்கு நன்றாய்த் தெரியாது, அல்லாமலும் இந்தப் பத்திரிகையினால் வெளிப்படுத்த நிச்சயித்திருக்கும் விஷயங்களின் கவரவத்தை யோசிக்கையில் முற்றும்நடைத் தெருத்தமிழா யெழுதுவதும் சரியாயிராது, சூரியனுடைய ஒளியினால் சந்திரன் பிரகாசிப்பதுபோல தாய்பாஷையாகிய சமஸ்கிருதத்தின் உதவியன்றி தேசபாஷைகள் பரிமளிக்க மாட்டாதென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். பொருளில் விசேஷ தாரதம்மியமில்லாவிடினும் சொல்தொடர்சியினால் காதுக்கு உண்டாகும் ஆநந்தத்தை யோசிப்போமாகில் தமிழைக்காட்டிலும் தெலுங்கு மேலானதா யிருக்கிறதல்லவா? இதற்குக் காரணமென்னவெனில் தமிழைக்காட்டிலும் தெலுங்கில் அநேகமஸ்கிருத பதங்கள் வழங்கிவருவதேயாம்.

அன்றியும் இதைப்படிக்கும் பலரும் பலவித நடைகளை விரும்பலாமாகையால் அவரவருக்கு வேண்டிய பலவிதசைலிகளில் இதை எழுதிமுடிப்பது அசாத்தியமென்று நினைத்து அந்தந்தவிஷயங்களுக்கியைந்த நடையை அனுசரித்து எழுத நாங்கள் நிச்சயித்தோம்.

ஆனாலிது பயன்படவேண்டாமா வென்றாலோ அப்பியாசத்தால் யானையுந்தூக்கலாம் என்கிற பழமொழிப்படிக்கு பழக்கத்தால் நேற்று அசாத்தியமானது இன்று கடினமாயும் இன்று கடினமானது நாளை எளிதாயும் நாளை எளிதானது மறுநாள் இனிப்பாயும் ஆகுமென்பதை யறியாதவர் ஒருவருமில்லை. இன்று தெரியாத பலபதங்களின் பொருளை தயை செய்து அயலாரால் அறிந்துகொண்டால் நாளைச் சிலபதங்கள் தான் தெரியாமலிருக்கும். இவ்விதமாக இந்தநடையை சுவல்ப சிரமத்தால் எலலோரும் அறிந்துகொள்வது எளிதாயிருக்கையில் இதைவிட்டுப் பலருக்கும் விருப்பமான நடையில் எழுத நாங்கள் முயல்வோமாகில் அது தலைக்குச் சரியான குல்லாய் செய்துகொள்ளாமல் குல்லாய்க்கு இசைய தலையைச் சிவிக்கொள்வதுபோலும் கடைசியாக இந்தத் தொழிலிலுள்ள வருத்தத்தை நன்றாயறிந்திருக்கும் நம்மவர்கள் சட்டின வீட்டிக்குப்பழுதுசொல்லாமல் எங்கள் நோக்கத்தையே மனதிற் கொண்டு கூடியசகாயமெல்லாம் செய்து எங்கள் பிரயத்தினத்தையும் முடிப்பித்துத் தாங்களும் பயனடைவார்களென்று நாங்கள் நம்புகிறோம்

இதற்கிடப்பட்ட தத்துவபோதினி யென்கிற பெயர், சரியானதல்லவென்று இரண்டொருவர் ஆக்ஷேபித்தார்களென்று கேட்ட நாங்கள் மதத்தைப்பற்றிய விஷயங்களில் மாத்திரந்தான் தத்துவமென்கிற பதத்தை உபயோகிக்கலாமென்று அவர்கள் கொண்டிக்கவேண்டுமென்று நினைக்கிறோம். தத்துவமென்பதற்கு பதார்த்தங்களின் சுவபாவம்குணம், உண்மை, முதலிய பல பொருள்களுண்டாகையால் தத்துவபோதினியென்கிற இந்த பத்திரிகையில் பிரகிருதிசாஸ்திரம் பதார்த்த விஞ்ஞானசாஸ்திரம் முதலிய வற்றைகுறித்து விசாரிப்பதில எல்லித ஆக்ஷேபமும் இல்லையென்று எங்கட்குத்தோன்றுகின்றது. இந்தபத்திரிகையின் உத்தேசியங்களைக்குறித்து முதல் லக்கத்தில் விசாரிக்கப்பட்டிருக்கிற படியால் அதை இப்போது மறுபடியும் பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை யலலவா

தத்துவபோதினி.

சோதரர்களே! ஊருக்கெல்லாம் சொல்லும் பல்லி தான்காடிப்பானையில் விழுமா மென்பதுபோல், உங்கள் பிராதிருவாற்சலியத்தைக்கோரிய நாங்கள் அன்புகூர்ந்த உங்களை இதற்குமுன் சோதரர்களேயென்று அழையாமல் கனவான்களேயென்று அழைத்தது புதுமையாய்த் தோன்றியிருக்குமல்லவா? உலகத்தில் சாதாரணமாய் சுவாபிமானமென்கிற பிசகான பெயரால் வழங்கிவரும். துரபிமானம் வெகு கொடியதாகையாலும், உண்மையான புத்திமான்கள்த

விர மற்றொருவரும் தமது குற்றத்தை அயலாரெடுத்துரைக்கப் பொறுக்க மாட்டார்களாகையாலும், நாங்கள் உங்களையெல்லாம் உடன் பிறப்பாகவே மதித்திருந்தபோதிலும் நீங்கள் எங்களை எவ்விதமாய் மதிப்பீர்களோவென்கிற சந்தேகத்தால் ஆழமறியாமல் காலிட்டுக்கொள்வது சரியல்லவென்று சற்று அஞ்சியிருந்தோம். விடிந்தால் கலியாணம் பிடியடா தாம்பூலம் என்பதுபோல், விசேஷப்பிரயத்தனமன்றி நாங்கள் நினைத்தவுடனே தொடங்கிய இந்தப்பத்திரிகையின் நல்ல உத்தேசியங்களையும், இதினுல் அடையக்கூடிய பல நன்மைகளையும், நீங்கள் மனதிற்கொண்டு, ஒருகையை வீசினுல் ஓசையுண்டாகாதே, ஆதலால் இதற்கு நம்மால் இயந்த உதவியைச் செய்யவேண்டும், ஆளுக்கொரு பிடிபோட்டால் ஆனைக்கும் சமையாகும், என்றுயோசித்து இவ்வளவு விரைவில் நாங்களெதிர்பார்த்ததற்கு அதிகமாகவே, நீங்கள் ஆதரிக்கக்கண்டு, எங்கள் அச்சம்நீங்கி, அன்பு இரட்டித்து, உங்களை அன்புள்ள பிரப்புக்களே யென்று அடிவயிற்றிலிருந்து அழைக்கின்றோம். இந்தப் பத்திரிகையை நாங்கள் தொடங்கிய சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப்போல எங்கள் சபையார் முயற்சிகளும், உங்கள் ஆதரவும், கடவுளின் கடாக்ஷமும், நாள்தோறும் வளருமென்று நாங்கள் உறுதியாய்நம்புகின்றோம்.

இந்த நம்பிக்கை யெங்களுக்குண்டாயிருந்தபோதிலும் தமையை நினைத்து நன்மையைக்கோரு என்கிற நியாயப்படிக்கு நம்முடைய யத்தினங்களுக்கு உண்டாகத்தக்க தடைகளின் னவையென்று ஆராய்ந்து அறிந்துகொண்டு, அவற்றை நிவர்த்திக்கும் வழிகளைத்தேடி அனுசரிக்கவேண்டியது நம்முடைய கடமையாக இருக்கின்றதல்லவா? தவிறித் தன்சண்ணைக்குத்தும்தன்கைகளை வெட்டுவோர்இவ்வுலகத்திலில்லையாகையால், தத்துவத்தைசொல்லும் போது, எங்களையும் அறியாமல் யாருக்காவதுமனது நோகும்படி நேரிட்டால், அவர்கள் எங்களைத் துறக்காமலிருப்பது எங்களுடன் பிறப்பாகிய அவர்களுக்கு விலகாக்கடமையாக விருக்கின்றது.

நாமெடுக்குங் காரியங்களில் இதுவரையில் ஒன்றுவது கைகூடிவாராமல் போனதற்குக் காரணமென்னவென்று விசாரிக்கப்புகுங்கால், அவை பலவாய்த்தோன்றுமாகிலும், அவற்றில் முக்கியமானதைக்குறித்து மாத்திரம் இன்று யோசிப்போம். அதென்னவெனில் முற்றும் அனுவசியகமானவும், அவியவஸ்தையுள்ளவும், நமது நிலைமைக்கடுக்காதவும், கடவுளின் கருத்துக்கிசையாதவும், வீண் பகையும், அசூயையுமேயன்றி வேறில்லை. இதை வெல்லுவதினுல் நமக்குண்டாகத்தக்க விலையற்ற பிரயோசனங்களை கூறுவதற்குமுன், இதிருப்பதினுல் விளையும் தீமையைச் சற்று யோசிப்போம்.

ஒருக்கால் உடலின் அவையவங்கள் பலவும் கூடிக்கலந்து யோசிக்கையில் வயிறு மாத்திரம் உழைப்பன்றி கொழுத்திருக்கக் கண்டு, மற்றவையெல்லாம் வியசனப்பட்டு "இதென்னகொடுமை பலகாலும் ஓய்வன்றி "நாமெல்லாம் முயன்று தருந்த கருவிகளை "க்கொண்டு ஓடியாடி, சுமந்து, அரைத்துக் "கரைத்து, சமைத்து, மென்று, விழுங்கி "னுல், எல்லாவற்றையும் வயிறு கொள்ளை "யிட்டுத்தின்று கொழுக்கின்ற தல்லவா? "நமக்கொருக்காலும் இது உதவிசெய்கின்ற "தில்லையே; இனி நாம் அதற்கு உணவளிக் "காமல் உலர்த்திக்கொல்வதும் தருமமே" என்று யோசித்து யாதொரு வேலையும் செய்யாமலிருக்க உறுதியாய் நிச்சயித்துக்கொண்டன. இவ்வாறு இரண்டொரு நாள்கடந்தபிறகு ஓராண்டிபசித்திருக்கலகமெல்லாம் சுழலுமாமென்பதுபோல், மதிமயங்கி, கண்ணுறங்கி, காதடைத்து, கைகால்விழுந்துபோய், அவற்றிற்கு உழைக்க இஷ்டமிருந்தாலும் சக்தியில்லாத நிலைமையை அடைந்த அந்த அவயவங்கள், கண்விழித்து "நாம் "கொண்டகருத்து பிசகு நாம் வயிற்றுக்கு "உணவளிததால் அதுநமக்கு பலமும், பொ "நியும், தருகின்றதென்றறி யாமல் அதை "யும்கொன்றுநாமும்கெட்டோமே; ஒருமை "ப்பாடேஉருதிப்பாடு, அவிழ்த்துக்கொட்டும் "நெல்லிக்காய் நாலும் நால்வழியாய் ஓடிவ "ழுபோல், நாம்நடப்பதுசரியல்ல" என்று அறிந்துகொண்டுஅவைகள்அததற்குறியதொழிலில் முயன்றனவென்னும் ஒருபழயகதையை அனைவரும் கேட்டிருக்கின்றோம். உடலிற்குஇந்த அவயவங்களெவ்வாறோஅவ்வாறே நமது தேசத்துக்கு அதின்மக்களு மென்பதில்லவ்வளவாயினும்சந்தேகமுண்டோ.

கடவுள் படைத்த ஜந்துக்களிலெல்லாம் மனிதன்மாத்திரம் ஒருதன்மையையும், மற்றவையெல்லாம் வேறுதன்மையையும், உடைத்தாயிருப்பது எல்லோருக்கும் வெளிச்சம். மிருகம்முதலிய பலவிததாழ்ந்த சிருஷ்டிகளை அததற்கு வேண்டியகாரியங்களை மற்றவற்றின் உதவியன்றி முடித்துக்கொள்ளும் நிலைமையில் கடவுள் வைத்திருக்கின்றார். அவற்றிற்குள்ள பசிதாக முதலியவற்றைத்

தீர்க்க பிறர்சகாயம் வேண்டியதில்லை. மனிதனுக்கோவென்றால் அவ்வாறல்ல. இவனுக்கு பிறர் உதவியின்றி ஒருகாரியமும் முடியாது. இவனுடையகோரிக்கைகளும், அனுபவங்களும், ஆவசியகங்களும், மிருகங்களினுடைய அவற்றைக்காட்டிலும், பலகோடிபங்கதிகமாமென்பது எல்லோரு மறிந்தவிஷயம். இப்படிக்கன்றி இவன் அந்த மிருகங்களைக்காட்டிலும் அதிக மேலானநிலைமையை விரும்பாமலிருந்தாலும், அயலாருதவியின்றி அவனுக்கு முடியத்தக்க காரியம் ஒன்றேனுமிராது. ஒருவன் தனக்குவேண்டிய உணவு, உடுப்பு, வீடு, முதலியவற்றைத் தானே செய்துக்கொள்ளத் தொடங்குவானுகில், அவனே தன் நிலத்தை உழுது, நீரிறைத்துப் பயிரிட்டுக், களைபிடிங்கி, அறுப்பறுத்து, நெல்லைக்குத்தி, சமைத்து, உண்ணவேண்டியிருக்குமாகையால், அந்தத்தொழிலின் பலபாகங்களுக்கு வேண்டிய ஆயுதங்களையும், அவற்றிற்குரிய சாதனங்களையும், பாத்திரங்களையும் அவனே செய்துகொள்ளவேண்டியிருக்கும். இவ்வளவு பாடுபட்டும் அது உருசியற்றபிண்டமாயிருக்கும். அறுசுவையுடன் உண்ணவிரும்புவோன் இதைக்காட்டிலும் நூறுமடங்கு பிரயாசப்பட்டாலன்றி அவனுக்குவேண்டிய கறிகளையும், அவற்றிற்குரிய சம்பாரங்களையும் சம்பாதித்தல் முடியாது. உணவுக்குமாத்திரமே இவ்வளவு வருத்தம் நேரிடுமாகில் மற்றதை விவரித்துச் சொல்வானேன். இதைக்காட்டிலும் ஊகித்துக்கொள்வது எளிதாயிருக்கும். இப்படிக்கன்றி ஒருவர்க்கொருவர் உதவிக்கொள்வதிலுலேயல்லவா நம்முடைய சீரும், சிறப்பும், போகமும் உண்டாகின்றன. இவ்வாறு கடவுள் நமக்களித்த நிலைமையை மாற்றுவதிலுல் நமக்குக் கேடுமம் கிடைக்குமென்று எவ்வாறுகூறலாம்.

ஒரு பானைசோற்றுக்கு ஒருசோறு பதமென்பதுபோல, ஒருமைப்பாடில்லாமையால் விளையும் தீங்குகளுக்கு இந்த உதாரணங்களே போதுமானவையாம். இனி ஒருமைப்பாட்டினுல் விளையும் விலையற்ற பிரயோஜனங்களுக்கு இரண்டொரு உதாரணம்கூறுவோம்.

நாம்நினைக்கவும்அரியகாரியங்களை அன்னியதேசத்தார்வெகுளிதாய்முடிப்பதைப்பார்க்கின்றுமே. இங்கிலீஷார் செயில்ரோட்டென்றும், தந்திதபாலென்றும் சொல்லில கூம்லகூமாய் நமதுதேசத்தில்நட, கோடிகோடியாய் விளைவதை தினந்தோறும் பார்த்திருந்தும், அதற்குகாணமென்னவென்று விசாரிக்காது, பிரமித்து, வியந்து, நிற்கின்றுமே. ஒருவனுல் நினைக்கவும்கூடாத காரியங்களை பலரால்முடிக்கவும் கூடுமென்பதற்கு வேறுதிருஷ்டாந்தங்கள் வேண்டியதில்லை. இத்தன்மையான காரியங்களைத்தனித்து முடிக்கக் குபேரனுலுமியலுமோ? ஆனுக்கொருகாசு அரசனுக்கோருகோடியென்பதுபோல் பேருக்குக்கொஞ்சமளித்துப் பெருந்தொகையைச்சேர்த்து, நாம் பாராதவாயில் நமது மனதுக்கு மெட்டாத இத்தன்மையான அதிகப்பிரபலமான காரியங்களையெல்லாம் இங்கிலீஷார் எளிதாய்முடிப்பதற்கு ஒருமைப்பாடன்றி வேறென்று காரணமாமோ. அவர்களுக்குள்ளிருக்கும் ஒருமைப்பாடு னம்மிடத்தில் இல்லாமற்போவானேனென்றுலோ, பரஸ்பரம் நம்பிக்கையென்னும் பதார்த்தமன்றி ஒருமைப்பாடுண்டாகாது. இங்கிலாண்டுதேசத்தில் வருஷப்பிரதி வருஷம்பலவாயிரம்ஷாப்புக்காரர் திவாலாகிவிட்டாலும் அவர்கள் இனிகூட்டுவர்த்தகஞ்செய்வதுசரியல்லவென்று நினையாமல் எதுவானுல் சுகத்தைத்தருமோ அதுவேதுக்கத்துக்கும் ஹேதுவாகையால் இவ்வுலகத்தில் துன்பம் நீங்கிய இன்பங்கிடையாதென்றும், ஆதலால் தங்கள் விருத்திக்குரிய காரியங்களைக்கைவிடலாகாதென்றும், யோசித்து அதற்கிசைந்தபடி நடக்கிறார்கள். நாமோவென்றுல் வீடிடிந்து இறந்தசிலரைக்கண்டு இனி வீட்டில் வசிக்கலாகாதென காட்டுக்குச் செல்ல விரும்புவோன், அக்காட்டிலுள்ள அதிகத்தீமைகளை மனதிற் கொள்ளாமை போல எப்பவோ ஒருக்கால்நம்பினவர்களில் ஒருவன்செய்த மோசத்தினுல் மற்றொருவரையும் நம்பக்கூடாதென விருதம்செய்துகொண்டு பெரும்பயன்களை யெல்லாம்கைவிடுகின்றோம் புலியைப்பார்த்து பூனைசூடிக்கொண்டதுபோல் இங்கிலீஷாரைப்பார்த்து "அண்டுகம்பெனி" என்றுபெருமைக்குமாத்திரம் பெயர்வகித்திருக்கும்நம்முடையவர்த்தகர்களில்சிலருடனுவது அயலார் கூட்டாளிகளாயிருப்பதை நாம் கேட்டதாவதுண்டோ? "யானைத்தலைமேல் மண்ணைத்தானே "போட்டுக்கொண்டாற்போல்" யோசிக்காமல் நாமாய்விளைவித்துக்கொள்ளும் தீங்குகளுக்கு, தன்பணஞ்செல்லாவிட்டால் தட்டானைக் கட்டியடியென்று அயலாரை ஏவலாமா, தெய்வத்தை நோவலாமா!

இந்தப்பகையும், அசூயையும், நமதுமதத்திற்காவது, தேசத்துக்காவது ஆவசியகமாயிருக்கிறதென்றுலோ அப்படிக்குமில்லை. மனிதனுக்குச் சிறப்பைத்தருவதில் ஜீவாகாரு

னியத்தைக்காட்டிலும் மேலானகுணமுமில்லை; அவனுக்கு நிந்தையைவிளைப்பதில் பகையென்பதைக்காட்டிலும் கொடியதோஷமுமில்லையென்பது சகல சமயத்தாருடைய மூல நூல்களின் கருத்தாகவிருக்கின்றது. நீதி நூல்களில் சொல்லியிருக்கும் எந்தநீதியையெடுத்தாலும், அதற்கெல்லாம் இந்தஒப்பற்றகுணமே தலையானதாகக்கொண்டாடப்பட்டிருக்கிறது. பிரும்மத்தின்எண்ணிலாக்கலியாண குணங்களையும் பரிமளிக்கச்செய்வது இந்த குணவரசேயல்லவா. கடவுளின்கருத்தெல்லாம்கூடி அவருடைய சிறுவிரலிலுள்ள சகலபூதங்களையும் நாம் அன்புபாராட்டி நன்குநடத்த வேண்டுமென்பதேயல்லவா? உலகத்தில் எல்லோரும்எல்லாவிஷயத்திலும் ஒத்திருப்பார்களென்று எதிர்பார்க்கக்கூடாது. மதங்களில்அபிப்பிராயபேதங்களுண்டாகுந்தோறும் பிரிவுகளேற்படுவது நமதுதேசத்தில் மாத்திரமேயன்றி எல்லாதேசங்களிலும் சஹஜமாயிருக்கிறது. அல்பவிஷயங்களிலுள்ள அபிப்பிராயபேதங்களால் முக்கியப் பிரயோஜனத்தை இழப்பதையோசிக்குங்கால், குல்லாயைக்காக்கமுயன்று, தலையை இழப்பதுபோலும்.

நமது தேசத்திலுள்ள பலவகுப்பாருக்கும் குலமுமொன்று, குடியுமொன்று வழிபடுதெய்வமுமொன்று, வழிபடுத்தும் வேதமுமொன்றுயிருக்க இவர்கள் வேண்டியதற்குப்பதிலாக, நாட்டிலும், மதத்திலும், கூடுமலாபங்களிலும், பேதப்பட்டிருப்பவர்களைப்போல, கோழிக்காச்சல், வேசிக்காச்சல் முதலியவற்றையும் அதிசயித்து, ஒருவரையொருவர்பகைத்து, முகத்தில் விழியாமல் வெறுத்துத் துறப்பதற்குக் காரணமென்னவென்று தீர்யோசிக்குங்கால், அதை வெளியட்டுச்சொல்ல நமக்கே லஜ்ஜையாகவிருக்கும். அத்தியல்ப சுவப்பிரயோஜனத்தை முன்னிட்டு, செடியைக்கவிழ்த்து நட்டு பயிராக்க வேண்டுமென்னும், அன்னியமதஸ்தருடன்நட்பு பாராட்டி கொண்டாடும் நாம், கத்தரிக்காயைக் குறுக்கே அரியவேண்டுமெனும்போது, அதை நெடுக்கே அரியவேண்டுமென்னும் நம்மில் சிலரை மதப்பிரஷ்டனென்றும், வேதபாஹியனென்றும், சண்டாளனென்றும் நிந்தித்துப் பகைப்பது நம்மது சுவரூபத்துக்கு எவ்வளவு அடுத்திருக்குமோ அதை நன்முய்யோசிக்கவேண்டும். நாம் கொஞ்சம் பிரயாசைப்பட்டு ஆராய்ந்துபார்ப்போமாகில், நாங்கள் மேலேகுறித்த உபமானத்தை அதிசயோக்தியாகக்கொள்ளாமல், சுவபாவோக்தியாகவே கொள்வோமென்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை.

அபிப்பிராயங்களில் பேதப்பட்ட ஆசாரியர்களுக்குள் இந்த அசூயையும் துவேஷமுமில்லையென்பதை யாராவது ஆக்ஷேபிப்பார்களாகில் அதை நாங்கள் ஐயமற நிரூபிக்கமாட்டுவோம். இப்படியிருக்கையில் அவர்கள் அபிப்பிராயங்களிலுள்ள பேதங்களின்னதென்றும், அதுகளின் தாரதம்மியமிப்படிப்பட்டதென்றும், முற்றும் அறியாதாம்மில் பலர், வேனிரில் வீடுவெந்துபோமென்றுபயந்து, ஒருவர்க்கொருவர் போராடி தலையை உடைத்துச்கொள்வதைக்கண்டு நீங்கள் நோவீர்களோ நகைப்பீர்களோ எங்களுக்குத்தெரியவில்லை.

இவ்வித வைஷம்யவிருத்தியினுல் மதத்துக்கு எவ்வளவாகிலும் சம்மந்தமில்லாதவிஷயங்களெல்லாம், பதத்தில் சேர்ந்துபோய், ஏறினுல் குற்றமும் இறங்கினுல் அபராதமுமாகி முடிந்தது. மதங்களின் பிரயோஜனங்களில் இம்மையைப்பற்றியது ஒருபாகமும், மறுமையைப்பற்றியது ஒருபாகமுமாம். மறுமையில் நாம் அடையதத்கப்பிரயோஜனத்தைப்பற்றி, இதுவரையில் அபிப்பிராயபேதம் விசேஷமாமில்லையென்று எல்லோரும் ஒத்துக்கொள்ளத்தக்கது. மறுமையில் கிடைக்கத்தக்கபயனை அடைய இம்மையில் அனுசரிக்கவேண்டியமார்க்கங்களையும், சாதனங்களையும் குறித்து மாத்திரம் பலவித அபிப்பிராயங்களிருக்கும். இவற்றுள் எந்த அபிப்பிராயம் சரியானதென்று அறிய ஒருசுலபமான மார்க்கமுண்டு. அதென்னவெனில் வெகுஜனகூடுமத்துக்கு ஹானிய்யாயுள்ளகாரியங்கள், மோக்ஷத்துக்கு சாதனமாகமாட்டாதென்று உறுதியாய் நம்பலாம்.

இவ்விஷயம் எப்படியிருந்தபோதிலும் கொஞ்சமாவது பிரயோஜனமன்றி, அளவற்றதீங்கை விளைவிக்கின்ற துவேஷம் இம்மையிலும், மறுமையிலும், ஒருமிக்க நஷ்டகரமானதாயிருக்கின்றதாகையால், அபிப்பிராய பேதங்களை துவேஷத்துக்குக் காரணமாக்கிக்கொள்ளாமல், மற்றவிஷயங்கள் நேரிடுகையில், எங்களுக்குள் நூறும் ஐந்துமாகிலும், அயலாருக்கு நாங்கள் நூற்றைந்தென்று சொல்லும் பழமொழியை ஸபலமாக்கி, நமதுகூடுமத்தையும் சுவரூபத்தையும் காப்பாற்றிக்கொள்வது ஒருக்காலும் நீங்காதகடமையென்று நம்பி அதற்குத்தக்கபடி நடக்க நமக்கு மனமளிக்கும்

பொருட்டு எப்போதும் பரப்பிரும்மத்தைத் திருகரணசுத்தியுடன் பிரார்த்திப்போமாக.

கடவுளிருப்பு.

அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றேயுலகு.

அகரமென்றும் எழுத்தானது எல்லாவெழுத்துக்கும் முதன்மையாகவும் ஆதிகாரணமாகவும் இருந்து தன் ஸ்வரூபவிகாரத்தால் எப்படி மற்றெல்லா வெழுத்துகளையும் உண்டாக்குகின்றதோ, அதுபோலவே கடவுளானவர் அண்டாண்டபிண்ட அசேசரமான உலகங்களுக்கு முதன்மையாக நின்று தன்சுவரூபவிகாரத்திலுலே அவைகளனைத்தையும் படைத்து இரக்ஷித்தருளுகின்றார்.

சச்சிதானந்த ஸ்வரூபியாகவும், சர்வாந்தரியாமியாகவும் யிருக்கும் ஒரு பரமாத்மா ஜீவகாருண்ணியராகி எங்கும் வியாபித்து ஜீவாஜீவங்கள் அனைத்துக்கும் காரணபூதராய் இருக்கின்றனர் என்று எல்லாச் சமயங்களும் முறையிட்டபோதிலும் நாஸ்திகனென்று சொல்லப்படும் சில அஞ்ஞானிகள் கடவுள் இல்லையென்றும் இவ்வுலகமும் அதிலுள்ள பொருள்களியாவும் தாமாய் உண்டாகி தாமாகவளர்ந்து நாளாவட்டத்தில் தாமாக அழிந்து போகுமென்று சொல்லி வேதசாஸ்திராதிகளின் நிபந்தனைக்குட்படாமல் தங்கள் மீனம்போகு மார்க்கங்களெல்லாம் அனுசரித்து இகபர சுகங்களிரண்டையும் இழந்துவிடுவார்கள்.

ஆயினும் உலகங்கள் யாவையும் படைத்துப் பரிபாலித்துவரும் பகவான் ஒருவர் ஊரென்னும் பரமரகசியத்தை பஞ்சபூதவிகாரமாகிய தாதுமூல பிராணுதி பொருள்களின் தன்மையால் நிதரிசனமாகக் கண்டறியலாம். எப்படியெனில் எப்பொழுதும் யாதொரு யந்திரங்களையும் பார்த்திராத ஒரு மனிதனிடத்தில் காலத்தைக்காட்டும் கடியாரம் ஒன்றைக்கொடுத்து இது தானுய் உண்டான பொருளென்றுல் அவன் நம்புவானே? இக்கடியாரத்தில் அநேக சக்கிரங்களும் வில்லும் சில்லிகளும் பல அளவினவாகி ஒன்றுக்கொன்று சிராகப்பொருந்திவெவ்வேறு உறுப்புகளா யிருந்தபோதிலும் எல்லாம் ஒருமித்து கருதிய காரியத்திற்குத்துணைக்கருவியா யிருப்பதைக்கண்டு அக்கருவியை அக்கருத்திற்கு இசையச் செய்தஅறிவு ஒன்று இதில் சம்மந்தப்பட்டு இருக்கவெண்டுமென்றுஸ்வபாவமாகவே ஊகிப்பான்.

அந்தக்கருவிகளை அக்கருதுதற்கிசையும்படி இணைத்துமுடிக்கிவிட்டால் பிறகு அவற்றுல்நாமெதிர்பார்க்கும்காரியங்களைவிளைப்பது அவற்றிற்கு இயல்பென்பது உண்மையே. ஆகிலும் அதற்குறிய அவயங்களையெல்லாம் முறைப்படி செய்து, நியமப்படி இணைப்பதற்கு ஒரு சருத்தாவில்லாமல் முடியுமா? கடியாரத்துக்கு வேண்டியசக்கிரங்களும், வில்லுகளும், சில்லிகளும் மற்றமுள்ள சமாக்கிரிகளும் தாமாயுண்டாகி இணைந்துகடியாராமானதை யராவது கேட்டதாவதுண்டோ இவ்வளவில்லாவிடினும், அந்த அவயவங்களையெல்லாம் முறைப்படி இயற்றி ஒரு பாத்திரத்தில் போட்டு சுட்டிவைத்தால், எப்போதாவது அவையெல்லாம் தாமாயிணைந்து கடியார்மாகுமோ? அப்படியாகுமெனில் பரிக்ஷித்துக் காட்டலாமே இப்படி முடியாதென்பதும், அதின் உறுப்புகளை ஏற்றக் குறைவின்றி பிரமாணப்படிசெய்து அவற்றை அததற்குறியவிடத்தில்வைத்து முடுக்கும் கையொன்று இருக்கவேணுமென்பது இன்றி யமையாக்கருவியாகும். இந்தப்பரத்தியக்ஷமான விஷயத்துக்கும் ருஜு கேட்பது, யானையைப்பார்க்க வெள்ளெழுத்தென்பது போலும்.

இவ்வாறே உலகத்திலுள்ள ஒவ்வொரு பதார்த்தங்களையும் எடுத்து, அததற்குள்ள விருப்பங்களையும், ஆவசியகங்களையும், அவற்றிற்கு விருத்தியையும் சுகத்தையும் அளிக்கும் பொருட்டு அவற்றுள் அமைக்கப்பட்டிருக்கும் உறுப்புகளையும், அவ்வுறுப்புகளின் வியாபரத்துக்கு விஷயமான பண்டங்கள்வெளியில் படைக்கப்பட்டிருப்பதையும், சற்று கவனித்துயோசிப்போமாகில், உலகத்திலுள்ள பண்டங்களொவ்வொன்றுக்கும் மற்றதுகளுடன் நீங்கலா சம்மந்தமுண்டெனவும் அச்சம்மந்தங்கள் கருதப்பட்ட ஒருகாரியத்தைக் குறிக்கின்றனவென்றும், அந்தக்கருத்துக்கு இயைந்தபடி கருவிகளை யமைக்க ஒருகர்தாவில்லாமல் முடியாதென்றும் ஸ்பஷ்டமாய் விளங்கும்.

இதை சவிஸ்தாரமாக விவரித்துச் சொல்வோமாகில் இது அகாதபுராணமாக ஏற்படுமாகையால், இந்தச்சிறு பத்திரிகைக்குத்தக்கபடி யாவரும் அறிந்துகொள்ளக் கூடிய சில திருஷ்டாந்தங்களைக்காட்டிமுடிப்போம்.

தெடியகடல் சூழ்ந்த இப்பூமியினுடையசுபாவத்தைப் பார்க்குமிடத்தில் அதுஎங்கும்புல்பூண்டு விருக்ஷாதிகளாகிய பலவிதபயிர்களோடு நிறைந்து சகலவித பிராணிகளுக்கும் ஆகாரமுதலியவற்றை உண்டுபண்ணி உத

வத்தகுந்தபொருளாய் காணப்படுகின்றது. பள்ளங்களும் மேடுகளும், கற்களும், களிமண்ணும், காடுகளும், கணவாய்களும், குட்டைகளும், குன்றுகளும், நதிகளும், ஓடைகளும், வந்தரங்களும், கடல்களுமாகியநீரும் நிலமும் கலந்த பலவித அங்கங்கள் உண்டாயிராமல் இப்பூமியானதுபெரியமணல் வெளியா யிருச்குமாயின் இதில் எவ்வித ப்பிராணிகளாவது வசிக்கக் கூடாதல்லவா. அப்படிக்கில்லாமல் எங்கும் பலவிதபயிர் விளைந்தோங்கும்படி தகுந்தமண்ணையும் ஆறுகள்முதலிய சலப்பிரவாகங்களையும் உண்டுபண்ணியிருப்பது சகல பிராணிகளும் வாசஞ் செய்யும்படியாகத் தான் என்பதற்குச் சந்தேக முண்டோ. இதுநிற்க பூமியிலிருக்கும் சகல சந்துக்களின் உடல் கூற்றை கவனித்தால் இந்த உண்மை இன்னம் விசேஷமாக விளங்கும். இங்கு நிலைபெற்றிருக்கும் உயிர்கள் யாவும் ஸ்தாவரமென்றும் ஜங்கமமென்றும் இரண்டு வகைப்படும். ஸ்தாவரமென்றால் பயிர்பூண்டு முதலியவைகளே. பிராணிகளைப்போல இவைகளுக்கும் ஒருவித உயிர் உண்டு. இதற்கு சாக்ஷியாவது ஒருசெடி சலமில்லாவிட்டால் வாடிக்காய்ந்து செத்துப்போகிறது சோர்ந்து விழுந்திருக்குஞ் செடிக்குஜலம்விட்டால்அதுமுகமலர்ந்துசெழிப்புடன் ஒங்கிவளரும், ஆதலால் உலகத்திலுள்ள ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் ஒரு ஆகாரமும் இல்லாமல் வாழ்ந்திருப்பதைக்காணும், ஒவ்வொரு ஜந்துவுக்கும் இவ்வாகாரத்தைக்கொள்ளவும் அதை ஜரிப்பிக்கவும் தகுந்த உறுப்புகள் உண்டாயிருக்கின்றன. பயிர்பூண்டுகள் மெல்லிய மண் தாதுகளையும் ஜலத்தையும் உண்டு வளரும். ஆதலால் அவைகளின் சரீரமாகிய தண்டுகளுக்குள்ளும் வேர்களுக்குள்ளும் பயிரிலும் வெகு நுட்பமான சிறிய துவாரங்கள் நிறைந்திருக்கின்றன. இவைகளின்வழியாக அந்த பயிர் மண்தாதுக்களையும் ஜலபாரகங்களையும் உறுஞ்சியுண்டு ஜீவிக்கின்றது.

பயிர்களுக்கும் பிராணிகளுக்கும் இடையாக ஒருவித சந்துக்கள் உண்டு. இவைகள் பயிருமல்ல பிராணிகளுமல்ல. பார்வைக்குப் புல் பூண்டுபோலவே யிருந்த ஜங்கமங்களைப்போல் அசைந்தோடித்திரியும். இவைகளுடைய இரப்பையானது ஒருவித குழலேயன்றி வேறொன்றுமல்ல. இக்குழலின் நுனி உதட்டைப்போல் இரண்டு பிரிவாயிருப்பதால் அதின்வழியாக பலவித கேசரங்களையும் மண் தாதுகளையும் பக்ஷித்து உயிர்வாழ்ந்திருக்கும். அவ்வாறே அநேகபுழுக்கள் தங்கள் சரீரத்திலுள்ள ஒருவித குழலினால் மண் ஜலமுதலியவற்றை யுண்ணும்.

இவ்வாறு புழு பூச்சி ஊர்வன பறப்பன நடப்பனவாகிய சகல பிராணிகளுக்கும் இரைப்பையானது அததின் அபீஷ்டங்களுக்கும் உணவுக்குந் தக்கபடி பல வேறுபாட்டுகளுடன் விசித்திர உருவங்களாக செய்யப்பட்டிருக்கின்றன. வயிரத் தன்மையுள்ள மாம்சாதி உணவுகளை பக்ஷிக்கும் சிங்கம் புலி முதலிய மிருகங்களுக்கு வயிறு பிகவுஞ் சிறுத்து இரைப்பை சுருக்கியிருக்கும். புல் பூண்டு முதலிய வயிறமற்ற ஆகாரத்தை விசேஷமாக உண்ணும் ஆடு மாடு யானை முதலிய ஜந்துக்களுக்கு வயிறு மிகப் பெருத்து இரைப்பை அகண்டிருக்கும்.

இதுநிற்க நமது சொந்த சரீரத்தின் தன்மையை யோசிப்போமானால் இந்தப் பெருஞ்சிறப்பின் பேரறிவு பின்னும் விசேஷமாகவிளங்கும். நமது இரைப்பை சகலவித பதார்த்தங்களையும் புசித்துச் செரிப்பிக்கத் தகுந்ததாயிருக்கின்றது மாம்சாதிகளைக் கடித்துக்கழிக்கவும், கந்தமூல பலாதிகளை மென்று அரைக்கவும், நமது பற்கள் சில கூராகவும், சில தட்டையாகவும் இருக்கின்றன. நமது விருப்பத்துக்கோ அளவில்லை. அனேகவித பதார்த்தங்களிலும் நமக்கு இன்பமுண்டு.

இதுவன்றி மனிதர், மிருகங்கள் முதலிய ஜந்துகளுக்கும் கந்தமூலாதிகளாகிய ஸ்தாவரங்களுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்களைக் கவனிக்குமளவில் இவைகளெல்லாம் நீராவியந்திரங்கூடிய பருத்தியாலை சர்க்கரையாலை முதலிய பெரிய எந்திரங்களின் பகுதிகளைப்போல ஒன்றுக்கொன்று ஏற்றதாகி அந்நியோந்நியமாக இவ்வுலக வாழ்க்கையாகிய பெருங்காரியத்தை அழிவு அலங்கோலமின்றி நடத்திவருகின்றன என்பது விசிதமாகும். நம்மைச்சுற்றிலும் உலகத்தில் காற்று என்னும் ஒருபொருள் உண்டென்று யாவரும் அறிவார்கள்.

மூலபதார்த்தமாகத்தோன்றும் இக்காற்றானது பிராணவாயு ஜீவாந்தவாயுஎன்றுகுணங்களிலும், சுபாவத்திலும்முற்றும் பேதப்பட்டிருக்கும் இரண்டுமூலவாயுக்களும்ஒருபிரமாணப்படிக்கு கூடி உண்டான சேர்க்கைப்பொருளாம். யந்திரசகாயத்தால் சாதாரணமான வாயுவை இவ்விரண்டாகப் பிரித்துக்காட்டவும், இவ்விரண்டு வாயுக்களையும் சம்பாதித்து கிரமப்படிக்குக் கலந்து

சாதாரணவாயுவை யுண்டாக்கிக்காட்டவும் கூடும்; பிராணவாயுவை புஜிக்காமல் ஒரு நொடிப்பொழுதாவது பிராணிகள் பிழைத்திராது; விளக்கும் எரியாது. இவ்வளவுபிரயோஜனத்தைத்தரும் இந்த வாயுவுனிடத்தில் ஒரு பிரபலமான தர்க்குணமுண்டு. ஒரு புட்டிநிறைய இந்தக்காற்றையெடுத்து அதிலொரு பதார்த்தத்தைப்போட்டு சுவல்பநீயேற்றினால், இந்தகாற்றுஅந்தபதார்த்தத்தை திராவகமாக உருக்கிவிடும். இவ்விதமாகவெயிலின் வெப்பத்தினால் இந்தகாற்று உலகத்திலுள்ள அனேத்தையும் திராவகமாக்கிவிடுமாகையால், இந்தக்கொடுமையை நிவர்த்திக்கும்பொருட்டு கடவுள் அத்துடன் ஜீவாந்த வாயுவைக் கலந்தார்.

உணவே உயிருக்குத் தூணென்று நினைத்து சிலர் வாயுபக்ஷணமென்று இகழ்ந்து பேசுவார்கள். உணவன்றி ஒருவாரமிருக்கலாம், வாயுபக்ஷணமன்றி ஒருநிமிஷமும்மிருக்கமுடியாது. ஒருநாளைக்கு நாமுண்ணும்வாயுவுடன் அன்னத்தை ஒப்பிடுவோமாகில், இது கணக்குக்குமகப்படாத அதிகசுவல்பமாகவிருக்கும். ஆகையால் பிராணிகளின்உயிர்வாழ்ச்சைக்கு இன்றி யமையாக் கருவியாகியவாயுவை அபரிமிதமாய்ப்படைத்த அருள்கடவுள் அது முழுமையும் நமது உடல்கூற்றில் சென்றால் விபத்து வந்தறுமென்று நினைத்து அதைத்தடுக்க நமது ஹிருதயத்தில் ஒரு யந்திரத்தையும் வைத்தருளினார். ஆகையால் நாம் புசிக்கும்வாயு அந்த யந்திரத்தினிடத்தில் வந்தவுடனே அதிலுள்ள பிராணவாயு நமதுரக்தத்தை பரிசுத்தமாக்கும்பொருட்டு காற்று குழலால் உள்ளே செல்லுகின்றது. ஹிருதயத்திலிருந்து ரக்தம் தேகமுழுமையும் சஞ்சரித்து நாமுண்ணும் பதார்த்தங்களின் சம்பந்தத்தால் உண்டாகும் அழுக்குகளைக் கழுவிக்கொண்டு மறுபடி ஹிருயத்துக்குமுன் அவ்வழுக்கு அவ்விடத்தில் தங்கியிருக்கும் ஜீவாந்தவாயுவுடன் சேர்ந்து போனவழியாலே வெளியில் வந்துவிடுகின்றது. இந்தக்காற்று பிராணனுக்குச் சேதமுண்டாக்குமென்கிற ஹேதுவைப் பற்றிதான் அயலார்மேல் மூச்சுவிடலாகாதென்று பெரியோருரைக்கின்றனர்.

பங்காளத்தில் முன்னொரு காலத்தில் கசo-மனிதரை ஒரு சிறு அறையாகிய சிறைச்சாலையி லடைத்துவைக்க அவர்களில் கஉo-பேர் ஒரு இராத்திரியில் மடிந்துபோனார்கள் என்று சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனால் நாம் பிரதிநினமும் பிராணவாயுவை வசித்து விஷக்காற்றை வெளியில் விட்டுவந்தால் நம்மைச் சுற்றிலுமிருக்கும் காற்றினது விஷத்தன்மை அதிகமாயடைந்து நம்மைக் கொன்றுவிடாதோவெனில் நமது சிருஷ்டிகருத்தாவானவர் அது அப்படி செய்யாமலிருக்க வெகு விநோதமான ஒரு தந்திரமுண்டாக்கி யிருக்கின்றனர். பிராணிகளெல்லாம் பிராணவாயுவை உட்கொண்டு ஜீவாந்தவாயுவை வெளியே விடும்படியாயும், பயிர், பூண்டு முதலிய ஸ்தாவரஜந்துக்கள் ஜீவாந்தவாயுவை உண்டு பிராணவாயுவை வெளியில் விட்டுவிடும்படியாயும், கடவுளமைத்திருக்கிறபடியால் ஒருக்காலும் காற்றுக்கு கருப்பில்லாமல் பிராணிகளுக்கு விஷமாயுள்ள காற்று பயிர்களுக்குத் தகுந்த ஆகாரமாயும், பயிர்களுக்குதவாத காற்று பிராணிகளுக்கு அவசியமாக வேண்டியு மிருக்கின்றது. இதனால் பயிர்களே பிராணிகளுக்காகவும், பிராணிகளே பயிர்களுக்காகவும், கடவுள் சிருஷ்டித்தாரென்பது பிரத்தியக்ஷ மாகவில்லையா? இவ்விதமாக பிரகிருதி பதார்த்த விஞ்ஞான சாஸ்திரங்களைப் படிக்குந்தோறும் இந்த சிருஷ்டியிலுள்ள விந்தைகளெல்லாம் ஒருசைப்பாடாகத் தோன்றுமாகையால் இதற்கெல்லாம் காரகன் ஒருவனிருக்கவேண்டுமென்று திருடமாயேற்படும். இந்தக் காரகனைத்தான் கடவுளென்றும், பிரம்மமென்றும், இன்னும் பலபலபேர்களாலும் குறிப்பிட்டு உலகத்தாரெல்லா முயன்று அடைகின்றனர்.

கடியாரமுதலிய பிரத்தியக்ஷமாயுள்ள பதார்த்தங்களுக்குக் கர்த்தா இருக்கக்கூடுமென்பதிலில் அப்பிரத்தியக்ஷமான விஷயத்தை ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்டோமாவென்றாலோ. உலகத்தில் பிரத்தியக்ஷப்பிரமாணம் சர்வ சிரேஷ்டமானதாகிலும், அது கிடையாதபோது அனுமானப்பிரமாணமும், அதுவு மில்லாவிட்டால் சப்த பிரமாணமும், இராஹிய மாகுமென்று சகல நியாயசாஸ்திரிகளும், ஒத்துக்கொண்டிருக்கின்றனர். இப்படிக் கில்லாவிடில் உலகத்தில் சர்வாபாசமான சித்தாந்தங்களெல்லாம் ஏற்படுவதற்கு ஹேதுவாகும் நாம் பாராததெல்லாம் கிடையாதென்றால், தன்னூரைவிட்டு வெளியில் செல்லாதவன் தன்னூர்தவிர வேறு பிரபஞ்சமே யில்லையென்றாலும் ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கும். ஆயினும் தன்னூர்க்குடிகளல்லாத சிலர் தன்னூருக்கு வரக்கண்டு அவர்களும் தன்னைப்போலவே நிலத்தின்மீது வசிக்கவேண்டுமாகையாலும், ஆனால் அவர்கள் தன்னூர்குடிகளல்ல வாகையாலும், அவர்களிருக்குமிடம் வேறொன்றிருக்கவேண்டுமென்று அறிந்துகொள்வது வெகுவருத்தமல்லவே! கொ

ஞ்சம் வருத்தப்பட்டு அவன்தன்னுரைவிட்டு வெளியில் சஞ்சரிப்பானுயின், முன் அனுமானத்தால் அடைந்தபலனைப் பிரத்தியக்ஷத்தாலும் அடைவான். எவ்விதத்திலாவது கடவுள் நமக்குப் பிரத்தியக்ஷமாய் விளங்குவாராவென்றுலோ, நமது ஞானக்கண்களைக்கட்டிவிட்டுகபோதியாக உலகமெல்லாம் திரிந்து தேடினாலும் அவனைக் காணேம். ஆனால் தகுந்த கருவியைக்கொண்டு சுவல்ப சிரமப்பட்டு நம்மைச்சுற்றியுள்ள பதார்த்தங்களில் சிலதின் தத்துவங்களையும், அவற்றின் சம்மந்தா சம்மந்தங்களையும், அச்சம்மந்தங்களின் நோக்கங்களையும், பயன்களையும், அப்பயன்களில் தன்மைகளையும், தீரவிசாரிப்போமாகில் அவர் நமது கர்மக்கண்ணுக்குத் தோன்றுவிடினும், நமது ஞானக்கண்ணுக்கெதிரே ஆக்கல், அளித்தல், அழித்தலென்னும் மூன்று நீங்காத்தொழில்களையும், அவற்றுள் விசேஷமாய்த் தன் சிருஷ்டியின் கூஷமத்தையும் தூலச்சுமையாகக்கொண்டு ஞாலுநந்த சுவரூபியாகவும், கருணாதி குணவரசுகளால் அலங்கரிக்கப்பட்டும், ஓய்வும் வேலையுமற்று வெட்டவெளிச்சமாய் நிற்பானென்பதில் சந்தேகமுண்டோ? கடைசியாக கடவுளிருப்பைப் பிரத்தியக்ஷப் பிரமாணமின்றி ஒத்துக்கொள்ளமாட்டோமென்பவர்கள் தங்களுக்குத் தாய்தந்தைகளுண்டென்று நிரூபிப்பார்களெனில் அதே ஹேதுவைக்கொண்டு கடவுளினிருப்பை ஸ்தாபிக்க நாங்கள் சித்தமாயிருக்கின்றோம்.

இவ்வாறு உலகம் பிரத்தியக்ஷக்காகூயாக கடவுளுடைய அளவிர்ந்த அருமை பெருமை நிச்சந்தேகமாகவிளக்கி அவரே தனக்கு மூலகாரணமும், சிருஷ்டிகர்த்தாவுமென்று அறிவிப்பதால், திருவள்ளுவநாயனர் இவ்விசேஷ கருத்தெல்லாம் எழுகடலும் ஒரு சிறுகடுவில் புகட்டியதுபோல் அமையும்படி அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு. என்றருளிச்செய்தனர்.

அர்த்தசாஸ்திரம்.

அவதாரிகை.

முதல்லக்கத்தில் பணத்தைக்குறித்துச் சுருக்கமாய் விசாரித்தோமல்லவா? ஆகிலும்எந்நூலையும் ஆதியோடந்தமாய்ப் படித்தாலன்றி அதினுடைய சரியான கருத்து விளங்காதாகையால், அப்படியே அதைக்கிரமமாய் விசாரிக்க நிச்சயித்து இன்று அவதாரிகையைமாத்திரம் சொல்லுகின்றோம். இந்த சாஸ்திர ஞானத்தினுல் விளையத்தக்க பயன்களெல்லாம் இதைப் படிக்குந்தோறும் தாமாய் விளங்குமாதலால், பிரதிருதத்தில் நாங்கள் விவரித்துச்சொல்லவேண்டியதில்லையாகிலும், தாராத்தனம் தொட்டுக்குடித்தனம்வரையில், இதைக்குறித்து ஸ்தூல ஞானமாவதில்லாவிட்டால், தேசத்தின் க்ஷேமமும் விருத்தியும் தடைபடுவதுமல்லாமல், எண்ணரிய தீங்குகள் விளையுமென்றுமாத்திரம் குறிப்பிடுகின்றோம்.

தேசத்தாருடைய திரவியத்தின் தன்மையையும், உத்பத்தியையும், அதின் விருத்திக்ஷயங்களுக்குரிய காரணங்களையும், அவற்றால் தேசத்தாருக்கு விளையத்தக்க நன்மை தீமைகளையுங்குறித்து விசாரிக்கும் நூலுக்கு ராஜியார்த்த சாஸ்திரம் அல்லது அர்த்தசாஸ்திரமென்றுபெயர்.

எத்தேசத்திலும் ஆதியில் முற்றும் நாகரீகமற்று மிருகப்பிராயமாயுள்ள நிலைமையில் வெகு விஸ்தாரமானப்பிரதேசத்தில் வெகு சுவல்பஜனங்கள் முற்றும் செயற்கையறிவின்றி வெகு சுவல்ப இயற்கை யறிவுடன் மலைகளிலும் காடுகளிலும் இருந்துக்கொண்டு பசிவந்துற்றபோது கந்தமூலபலாதிகளையும் வேட்டையாடியும் மீன்பிடித்தும் கிடைக்கும் மாம்சங்களையும் உண்டு, திருப்தியடைந்து இனியாதொரு முறையுமில்லாதவர்களைப்போல் திரிந்துகொண்டும் உறங்கிக்கொண்டு மிருப்பார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் உணவு நியதமாய்க் கிடையாதாகையால் அடிக்கடி தரிப்பு நேரிட்டு அந்த சுவல்ப ஜனங்களிலும் அதிஸுல்பமடிந்துபோவோர் சிலரும், துஷ்டமிருகங்களுக்கு இரையாகி விடுவோர் சிலரும், பிணி மூப்புகளால் உணவிற்காகத் திரியமாட்டாமல் இளையவரிரக்கத்தால் கொல்லப்படுவோர் சிலருமாக இருப்பார்களாகையால் ஜனவிருத்தியாகவேமாட்டாது. அல்லது ஆனாலும் அது வெகு சுவல்பமாயிருக்கும்.

இவர்கள் இந்த நிலைமையைவிட்டு மேய்ப்புத்தொழிலை அனுசரிப்பார்களாகில், அவர்கள் முன்போல் உணவுக்காக வெகுதூரம் சஞ்சரிக்கவேண்டியிராது. அவர்களுடைய ஆடுமாடுகளுக்கு உணவு கிடைக்கத்தக்க தூரம்திரிந்தால போதுமாகையாலும், இத்தொழிலினுல் முன்னிலும்நியதமாய் உணவு கிடைக்குமாகையாலும், அவர்கள் குடும்பங்களும் சற்று விருத்தியாகி, அவர்களுடைய பயங்கரமான மிருகத்தன்மைமாறி நாகரீகமும், செல்வமும் உண்டாகத் தொடங்கும்.

இவ்விதமாக வெகுகாலம் கடந்த பிறகு அவர்கள் பயிர்த்தொழிலை அறிந்துகொண்டு,

சுவல்ப நிலத்தால் பலர் உணவைச் சம்பாதித்துக்கொள்ள வல்லவராவார்கள். பிறகு உணவு நிமித்தம் நிரியவேண்டிய ஆவசியகம் அடியுடன்நீங்கி, அவர்கள்நிலத்தருகுடிகளாகி தேசவிருத்திக்குரிய காரியங்களையும் சாதனங்களையும் தேடித் தெரிந்துவிருத்திசெய்யத் தொடங்குகிறார்கள்.

முற்றும் நாகரீகமற்ற நிலைமையில் தரைத்தனம், குடித்தனம், மேல்வகுப்பு, கீழ்வகுப்பு என்கிற வியவஸ்தையே யில்லாமல் எல்லோரும் சமமாயும், பலமுள்ளவரே பெரியோராயு மிருந்திருப்பார்கள்.

மேய்ப்புத்தொழி லுண்டானமாத்திரத்தில் ஆட்டு மந்தைகளும், மாட்டுமந்தைகளும் உண்டாவதினால், சொத்தும், சுவத்துவமும், ஜனிக்கின்றது. அவற்றைக் காக்கும் பொருட்டு சட்டதிட்டங்கள் அவசியம் வேண்டியிருக்கும். அந்தந்த மந்தைக்காரர்களின் தலைவர்கள், அப்படிப்பட்ட சட்டதிட்டங்களை விதிப்பார்கள். அவற்றிற்கு விரோதமாய் நடப்பது குற்றமென்றும், அதற்கு சிக்ஷையும் ஏற்படும். பயிர்த்தொழிலையவலம்பித்துஜனங்கள் நிலைத்தகுடிகளான பிறகு படிப்படியாக ஏற்பாடுகளெல்லாம் சீரடைந்து அரசாட்சியாவது குடியரசாவது ஏற்பட்டு, எல்லாம் புதுமையாகி, உழைப்புபெருகி, செயற்கையிவ்வளர்ந்து, பணமுண்டாகி, தொழில்கள்பிரிந்து, ஞானமும் திறமையும் விருத்தியாகி, ஒருக்காலும் நாகரீகமற்ற நிலைமையைப் பாராதவர்போல அவர்கள் கோட்டைகளை யொத்த வீடுகளையும், தோட்டங்களையொத்த ஊருகளையும், சன்சிறறும் வாகனங்களையும், சுபதமான ரோட்டுகளையும், சமுத்திரத்தைப்போன்ற சாசுகளையும், மிகச்சிறந்த நாகரீகத்தையும், ஆனுகூலிய, ஆநந்த, அனுபவங்களையும் அடைவார்கள்.

இனி திரவியத்தின் சுவபாவத்தைக்குறித்துச் சற்று யொசிப்போம். உலகத்தில் சாதாரணமாய் பொன் வெள்ளிதான் திரவியமென்று கொள்ளப்பட்டிருக்கிறது. மனிதசஞ்சாரமில்லாத பாழ்வெளியில் பொன் வெள்ளியால் என்னபயனை யடையக்கூடும். ஆகையால் பணம்மாத்திரமேயன்றி அதைக்கொண்டு நாம் வாங்க விரும்பும்பண்டங்களும் திரவியமாகும். ஆதலால்நம்முடைய உபயோகத்துக்கும், ஆனுகூலியத்துக்கும், போகத்துக்கும், உதவத்தக்கவையெல்லாம், திரவியமென்று லக்ஷணம் கூறுவோமாயின் நாம் ஒருபோதும் பிசகமாட்டோம். ஏனெனில் மதிப்புள்ளவும், நமது விருப்பத்துக்கும் வர்த்தகத்துக்கும்உதவுகின்றவும், வீடு, நிலம், ஆனி, மணிமுதலிய சகலமும் அதில் அடங்கியிருக்கும். வர்த்தகத்துக்குதவாத பதார்த்தில், ஒன்றும் திரவியமாகாதாவென்றாலோ; அப்படியாகாதுதான். ஒருக்கால் பிரான்சுதேசத்திலிருந்து திராக்ஷா சாராயத்தை வெளிதேசத்துக்கு அனுப்பக்கூடாதென்று தூரைத்தனத்தார் உத்தரவு செய்தபோது, அந்ததேசத்தில் உளவான திராக்ஷாப்பழத்துக்கெல்லாம் செலவில்லாமல், அதின்விலை மிகவும் குறைந்துவிட்டபடியால், அதைப்பறிக்குங் கூலிகூட கட்டிவராமல், அதற்குடையவர்கள் அதைப்பறிக்காமல் விட்டுவிட்டார்கள். அது திரவியமாயிருந்ததாகில் அப்படிநடக்குமா.

நீதி சாஸ்திரங்களெல்லாம் பொருளாசை பொல்லாதென்று உரைத்திருக்க, இந்த சாஸ்திரத்தின் முக்கிய உத்தேசியமே திரவியார்ஜனை யாகின்றதே; இதைப் படிக்கலாமாவென்று ஒரு சந்தேகம் பிறக்கலாம். பொருளில் துராசைமார்த்திரம் நிந்தியமாகுமேயல்லாமல் வேறல்ல. பொருளில்லாமல் ஏந்த தர்மந்தான் கைக்கூடும். பிராணனைக் காத்துபிறகல்லவோ தர்மத்தை தேடவேண்டும். அதற்கே பொருளில்லாமல் முடியாதே. மற்ற பண்டங்களைப்போலவே பணத்தையும் துர்விநியோகப்படுத்தக் கூடுமென்கிற ஹேதுவைக்கொண்டே அதை நிந்திக்கலாமா. தேசத்தாருடைய சமுதாயக்ஷேமத்துக்கு திரவியம் ஆவசியகமானதாலும், அந்த க்ஷேமத்துக்குதவும் காரியம் ஒன்றும் பழுதாகாதானதாலும், சரியானமார்க்கத்தில் செய்யும் திரவியார்ஜனை குற்றமுள்ளதென்பது சரியல்ல. இனி சொத்து, முதல், கூலி, வரும்படி, வர்த்தகம் முதலிய இந்த நூலின் பல பாகங்களைக்குறித்துக் கிரமமாய் விசாரிப்போம்.

பிரகிருதிசாஸ்திரம்.

முன்பத்திரிகையில் ஆவியந்திரத்தைக்குறித்துப் பிரசங்கித்தபோது, அதின் அவயவங்களைமாத்திரம் விவரித்து, அதைப்பற்றிய மற்ற விஷயங்களெல்லாம் இனி விவரிப்போமென்றோம். நாங்கள் வருத்தப்பட்டு அதையெல்லாம் எவ்வளவு தெளிவாய் எழுதினாலும், இதைப் படிப்பவரில் பலருக்கு இந்த சாஸ்திரம் அடியுடன் தெரியாதாகையாலும், ஸ்தூலஞானமாவதில்லாமல் சூக்ஷ்மஞானம் உண்டாவது அருமையானகையாலும் இதின் பிறிவுகளை ஒவ்வொன்றாய் எடுத்து ஆதியோடந்தம் ஸ்தூலமாய்ச்சொல்லத் தொடங்குகின்றோம்.

நமது தேசத்தார் சாதாரணமாய் பிரகிருதிசாஸ்திரத்தை கேவலம் சில்பினாலென்

றும், அது விஞ்ஞானவிருத்திக்காவது, மறுமைப்பயனுக்காவது உதவத்தக்கதல்லவென்றும், அதை இழிவாகப் பேசுகிறார்கள். இத்தன்மையான அபிப்பிராயம் முற்றும் பிசகானதென்றும், "கபடிகள் கல்வியை இகழ்வார். மேதகர் அதைக்கண்டுமகிழ்ப்பார். "விவேகிகளோ அதைபயன்படுத்துவார்" என்று லார்டுபேகன் சொல்லியது நம்மவர் விஷயத்தில் சரியாயிருக்குமென்றும். இதைப்படிக்குந்தோறும் உங்களுக்கே தெரியவருமாகையால், அதைக்குறித்து நாங்களிப்பொழுது சர்ச்சிக்கவேண்டிய ஆவசியகமில்லை.

பிரகிருதிசாஸ்திரத்தையும், பதார்த்தவிஞ்ஞானசாஸ்திரத்தையும் கசடறக்கற்பதினால் இம்மைப்பயன்மாத்திரமேயன்றி, மறுமைப்பயனும் கைக்கூடுமென்பதில் சந்தேகமில்லை. இதை அறிய நாம் வெகுதூரம் போகவேண்டியதில்லை. நம்மைச்சுற்றிலும் குபேரசம்பத்துடனே இராஜமாளிகைக்களுக்குஞ் சிறந்த அழகிய வீதிகளில் வாசஞ்செய்து தேவரதங்களுக்கொப்பாகிய வண்டிகளில் சவாரிசெய்கின்ற இங்கிலீஷாருடைய பூர்வஸ்திதியைச் சற்று கவனித்தால் இதனால் விளையும் கனமும், தனமும், சிறப்பும், சீர்மையும், தெளிவாகவிளங்கும். நிலவளம், நீர்வளம்பொருந்திய இப்பெருநாட்டை இமயமலைதொடங்கி கன்னியாகுமாரிவரையில் நேர்கிகரில்லாமல் ஏகச்சக்கிராதிபதியாய் அரசாளும் இங்கிலீஷார் ஆதியில் சிறிந்தி மிருகச் சருமங்களையுடுத்து, காட்டில் திரிந்து கண்டதையுண்டு கடையராயிருந்த வர்களல்லவோ? கொஞ்சகாலத்துக்குமுன் இந்தத்தன்மையாயிருந்த இவர்களுக்கு இப்பொழுது இவ்வளவு சிறப்பும் மேன்மையும் உண்டானதற்கு இதைத்தவிரவேறுகாரணமுண்டோ. பூமியும், ஆகாசமும் நடுநடுங்க இடிமுழக்கம்போன்ற பேரொலியோடு இரவும்பகலும் ஓயாமல், பறக்கின்ற பறவைகளுக்கும், வீசுகின்றவாயுவுக்கும் விசேஷித்தவேகத்துடனே ஓடினாரமென்பதில்லாமல், அநேகதாதங்களால் பிரிக்கப்பட்டிருப்பவர்களை அற்பகாலத்தில்கூடிப்பேசி குலாவும்படி செய்கின்ற புகைவண்டியும், வாயுவேகத்தையும் மனோவேகத்தையும் வெட்கச்செய்து ஆயிரமயில்தூரத்தை அற்பமாகிய சிலநிமிஷங்களில் கடத்தி; நமது கஷ்ட நிஷ்டூரங்களையும் சுகதுக்கதோஷங்களையும் வெளிப்படுத்தும், தந்திதபாலும் மலைப்போல்எழுந்தமதிமயங்கச்செய்யும் பேரலைகளுக்கும், பெருமழைக்கும், சண்டமாருதத்துக்கும் அஞ்சாமல் அபாயமின்றி, மோதுகின்ற அலைகளையுங்காற்றையும் சக்கிரம்போல் கண்டதுண்டமாக்கி யானையைப்போல் கம்பீரமாகச் செல்லும் புகைக்கப்பல்களும், இவ்விதசாஸ்திரஞானத்தின் பயனேயல்லவா! இதினால் விளையத்தக்க இம்மைப்பயன்களை நம்மவர் அனைவரும் சற்றேறக்குறைய அறிந்திருக்கிறபடியால் அதைக்குறித்து விசேஷகாலத்தைப் போக்கவேண்டியதில்லை.

மறுமைக்கு இத்தஞானம் எவ்வாறு உதவுமென்றால், சற்று கூறுகின்றோம். சூக்ஷமதிருக்பீணம் என்னும் யந்திரத்தால் பதார்த்தங்களைப் பரிசோதிக்கும் போது, சிருஷ்டியின் அநந்தவெளியில் ஒவ்வொரு பரமாணுப் பிரதேசத்திலும், அநந்தகோடிஜீவன்களிருக்கின்றனவென்றும், அதற்குத்தக்க அவயவங்களையும், சக்திகளையும், விருப்பங்களையும், ஆவசியகங்களையும் கடவுள் அளித்துக் காக்கின்றாரென்றும் அவற்றின் ரூபங்களைமாத்திரம், அறியநமக்கு சாதனமளித்தகடவுள், அவற்றின்புத்தி, சுவபாவ குணதிகளை அறிவிக்க வில்லையென்றும். இரண்டுபதார்த்தங்கள் சேரும் போதும் பிரியும்போதும் உண்டாகவேண்டியதென்று கடவுளால் நியமிக்கப்பட்ட கார்யங்களைமாற்ற யாராலும் முடியாதென்றும் இன்னும் அனேகவித யோசனைகளால் நம்முடைய அப்பிரயோஜகத்துவமும், கடவுளின் சக்தி குண சம்பத்துக்களும் நமக்குதெளிவாய் விளங்கும். இவ்வாறுக இந்த சாஸ்திரத்தில் விசாரிக்கப்படும் ஒவ்வொரு விஷயங்களையும், நன்றாக விசாரிக்கயத்தனிக்குங்கால் கடவுளின் சக்திகுணசுவரியங்களில் முழுகிக் கரைதெரியாமல்த் தட்டித்தடுமாறி, அதிதைனியத்தை அடைந்து, அஹங்காரத்தை விட்டொழித்து நம்முடைய புத்திசாமக்கிரிகளால் கடவுளின் எண்ணரிய குணங்கள் அருளும் ஆநந்த அனுபவங்களை அடையக்கூடுமென்பது வெறுங்கனவென்றும், அவருடைய கருணைவெள்ளம் நம்மை அடித்துகொண்டுபோய் அவர் திருவடியில் சேர்த்தாலல்லாமல் நமக்குகதியாவது கோரிக்கையாவது கிடையாதென்றும் நம்பி; திக்குந்திசையுந்தெரியாமல், அவரடியே சரணமென்று நம்மைக் காணிக்கையாகச் செலுத்துவோம். கடைசியாகக் கடவுளின் செங்கோலின் நோக்க மின்னதென்றும், அதை முடிக்க அவர் அனுசரிக்கும் சாதனங்களித்தன்மையதென்றும்; அவருடைய அகடிதகடனாசாமர்த்திய மிப்படிப்பட்டதென்றும், விளக்கிக்காட்டத்தக்க உலகத்திலுள்ள பதார்த்தங்களுக்கு உரித்தான தத்துவங்களையும் தர்மங்களையும், அவற்றின் சேர்க்கையினாலும் பிரிவினாலும் விளை

யும் நீக்கவரிய காரியங்களையும், நாலுவித மாய்த்தோன்றும் பதார்த்தங்களிலுள்ள நியமங்களின் ஒப்புமைகளையும், சம்மந்தங்களையும் நம்முண்டாய புத்தி, யுக்தி கணித பரிசோதனைகளால் தீர்க்கங் களால நீர விசாரித்துத் தெளிந்து, நமதுகாலம் சிறிது, ஞானம் பெரிதென்றும், ஞானமும் சிறிது ஞேயம்பெரிதென்றும், நேராய் அறிந்து ஈடுபட்டு அனுபவிக்கும் ஆநந்தத்துக்கும், பரப்பிரும்மத்தின் குணங்களையும் சக்திகளையும் வர்ணித்துச்சொல்லியிருக்கும் நூல்களைப் படிப்பதினால் உண்டாகும் சுகத்துக்கும், உள்ளபேதம் எப்படிப்பட்டதென்றால், அமிருதத்தை உண்டவனுக்கும் அதைக்குறித்து ஏட்டில் படித்தவனுக்கும் உண்டாகத்தக்க ஆநந்த தாரதம்மியத்துக்கு ஒப்பாயிருக்கும். இப்படி நேராய் அனுபவிக்காமல் ஒருவர் சொல்லிக்கொடுத்தபேச்சும், கட்டிக்கொடுத்த சோறும், எவ்வளவுதூரம் தாங்கும் எங்கள்பேச்சின் உண்மைக்கு உங்கள் அனுபவமே சாக்ஷியாகுமாகையால் இதை நாங்கள் வளர்த்திக் கூறவேண்டியதில்லை.

சிருஷ்டியிலுள்ள பதார்த்தங்களெல்லாம் ஜடமாயாவது அஜடமாயாவது இருக்கும் ஆத்மா, மனது, ஹிருதயம், முதலியவையெல்லாம் அஜடபதார்த்தங்களாம். வேத வேதாந்த, நீதி, மானஸ, சாஸ்த்திராதிகள் இந்த பதார்த்தங்களையும், இவற்றின் சுவபாவங்களையும், தத்துவங்களையும், ஜடாஜடங்களுடைய சம்மந்தத்தினால் உண்டாகும் பிரயோஜனங்களையும், ஜீவாத்ம பரமாத்மாக்களுடைய சம்மந்தங்களையும், இன்னும் இத்தன்மையான வற்றையுங் குறித்து விசாரிக்குமாகையால், அவற்றிற்கு இவ்விடத்தில் பிரசக்த்தியில்லை. ஜடபதார்த்தங்களைக்குறித்து விசாரிக்கும், சாஸ்திரம் பிரகிருதி சாஸ்திரமென்றும், பதார்த்த விஞ்ஞானசாஸ்திரமென்றும் இருவகைப்படும். உலகத்திலுள்ள ஜடபதார்த்தங்களில் அதநம்குறிய குணங்களையும் தத்துவங்களையுங்குறித்து விசாரிப்பதற்கு பிரகிருதிசாஸ்திரமென்று பெயர். பலபதார்த்தங்களின் சம்யோக வியோகங்களால் உண்டாகும் காரியங்களைக்குறித்து விசாரிப்பதற்கு பதார்த்தவிஞ்ஞான சாஸ்திரமென்று பெயர். இவற்றில் பதார்த்த விஞ்ஞான சாஸ்திரத்தைக்குறித்து பிரகிருதத்தில் விசாரிக்கப்படாது.

பிரகிருதி சாஸ்திரமானது, யந்திரசாஸ்திரம், திருஷ்டிசாஸ்திரம் திரவசாஸ்திரம், வாயுசாஸ்திரம், கோளசாஸ்திரம் முதலிய பல உட்பிரிவுகளையுடையதாம். இவற்றுள் முதலில் யந்திரசாஸ்திரத்தை ஆரம்பிக்கின்றோம். இதில் பதார்த்தமென்கிற சொல் வருமிடத்திலெல்லாம் ஜடபதார்த்தமென்று கொள்ளவேண்டியது.

யந்திரசாஸ்திரஞ்ஞாள் பதார்த்தங்களை பிரவாஹி என்றும். அப்பிரவாஹி அல்லது கனபதார்த்தம்என்றும் இரண்டுவகையாய்ப்பிரித்திருக்கிறார்கள். இந்தபிரவாஹியானதுசங்கோசநீயப் பிரவாஹிஎன்றும், அசங்கோசநீயப்பிரவாஹிஎன்றும்இரண்டுஉட்பிரிவுகளையுடையதாம். வாயுசாமானியமும் சுருங்குந்தன்மையையுடைபதாகையால்சங்கோசனீயப்பிரவாஹியாகும். திரவங்களெல்லாம்என்றுல்ஜலமும் அதைப்போன்றதுகளும் எவ்வளவுஅழுத்தினாலும்சுருங்கமாட்டாதாகையால் அசங்கோசநீயப் பிரவாஹியாரும், இவ்விரண்டு பிரிவுகளிலும் சேராமலும் கெட்டியாயும் உள்ளபதார்த்தங்களெல்லாம் கனபதார்த்தங்களாகும்.

இந்த நூலை மூன்றுபாகங்களாகப் பிரித்து, முதல்பாகத்தில் ஜடபதார்த்தங்களுக்கெல்லாம் சாமானியமாயும் சிலதிற்கு விசேஷமாயுமுள்ள தர்மங்களைக்குறித்தும்; இரண்டாம்பாகத்தில் சலன நியமங்களைக்குறித்தும்; மூன்றும் பாசத்தில் யந்திரசக்திகளைக்குறித்தும் தொடர்ச்சியாய் விசாரிக்க நிச்சயித்தோம்.

முதல்பாகம் சாமான்னியதர்மங்கள்.

ஜடபதார்த்தங்களுக்கெல்லாம் அநவகாசதத்துவம், பரிமாணம், ஆசாரம், விபாஜியத்துவம், ஜடத்துவம், ஆகர்ஷகத்துவம், என்கிற ஆறுசாமானிய தர்மங்களுண்டு, அநவகாசதத்துவம்என்கிறதர்மத்தின் வியாபாரத்தினால் இரண்டுபதார்த்தங்கள் ஏககாலத்தில் ஒரேஇடத்தில்இருக்கமாட்டாதுகள். இதற்கு திருஷ்டாந்தரமாக, இரண்டு கல்லுகளை ஒன்றுடனொன்று சேர்த்தால் அவை ஒன்றின்மேல் ஒன்றுயாவது ஒன்றின்பக்கத்தில் ஒன்றுயாவது இருக்குமேயல்லாமல் இரண்டும் ஏககாலத்தில் ஏகதேசத்தி லிருக்கமாட்டாது, மேலும் ஒரு தொட்டியை ஜலத்தால் நிறைத்து அதிலொரு கல்லைவிட்டால் அந்தக்கல்லின் அளவு ஜலம் வெளியில் வழிந்துவிட்டு, அப்படி வழிந்த ஜலம் முன்னிருந்தவிடத்தில் பிறகு கல்லிருக்குமேயல்லாமல் கல்லும் ஜலமும் ஒரேகாலத்தில் ஒரேயிடத்தில் இருக்கமாட்டாது. இம்மாதிரியாகவே ஒருதொட்டியை நீரால்நிறைத்து அதில் ஒரு பஞ்சபாத்திரத்தை கவிழ்த்து யெவ்வளவு ஆழவரையில் அழுத்தினாலும் அந்த பஞ்சபாத்திரத்தில் காற்றிருக்கிறபடியால் அதற்குள் சலம் ஏறமாட்டாது. அதின் பின்புறத்தில் ஒரு ரந்திர மிருக்கும் பட்சத்தில் அந்தவழியாய் பஞ்சபாத்திரத்துக்குள்ளிருக்கும் காற்று குமிழிருபமாய் வெளியில்

வருந்தோறும் அதற்குள் இடமுண்டாகி ஜலம்ஏறும், அப்படிரந்திரமில்லாவிட்டாலும் அந்தபாத்திரத்துக்குள் கொஞ்சம் வரையில் ஜலம்ஏறும். ஏனென்றால் காற்று சங்கோசனிய பிரவாகியாகையால் அதற்கு சுவபாவமாய் வேண்டிய இடத்தைக்காட்டிலும் சுவல்பமான இடத்தில் அடங்கும்படி அதை அழுத்தலாம். ஆகையால் பஞ்சபாத்திரத்தின் அடியிலுள்ள சலம் அதற்குள்ளிருக்கும் காற்றை அழுத்தும்போது அந்தக்காற்று கொஞ்சம்சுருங்கி இடங்கொடுக்குமாகையால் அதற்குள் கொஞ்சம் ஜலம் ஏறும். ஆனாலும் அதற்குள் காற்றிருக்கிறவரையில் அதை ஜலம் நிறைக்கமாட்டாது, மரத்தில் ஆணியை அடித்தால் மூன்மரம்மாத்திரமிருந்தவிடத்தில் மரம் ஆணியிவ்விரண்டு மிருக்கிறதேயென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆனால் அந்த ஆணியை மறுபடியும் பிடுங்கிவிட்டால் முன் அதிருந்த விடத்தில் மரத்தின் ஒருபரமாணுவாவது மிருக்கமாட்டாது. ஆதலால் மரமானது பஞ்சுமுதலியவற்றைப்பொல ரந்திர பதார்த்த மாகையால் ஆணிபிரவேசிக்குமிடத்திலுள்ள மரத்தின் பரமாணுக்கள் விலகி ஆணிக்கு வழிவிடுகிறதேதவிர மரமும் ஆணியும் ஒரேகாலத்தில் ஒரேஇடத்தில் யிருக்கமாட்டாதென்பது, பிரத்தியக்ஷமாயிருக்கும். ஒரு பஞ்சபாத்திரஜலத்தில் கொஞ்சம் சர்க்கரையைச் சேர்த்தால் அந்த ஜலத்தின் அளவு விருத்தியாகமல் முன் ஜலமாத்திரம் இருந்தவிடத்தில் பிறகு ஜலம் சர்க்கரை இவ்விரண்டும் யிருக்கிறதேயென்கிற சந்தேகம் சகஜமாய்த் தோன்றலாம். ஜலத்தினுடைய பரமாணுக்கள் கோளாகாரமாயிருக்கிறதென்று இனிரூபித்துக் காட்டப்படும். அப்படி உருண்டவடிவாயுள்ள பரமாணுக்கள் ஒன்றோடொன்று சேரும்போதுநன்றாய் இணங்காமல் நடுவில் சந்துகளிருக்குமென்பதற்கு எலுமிச்சங்காய்க் கும்பலே திருஷ்டாந்தமாய்க் கொள்ளவேண்டியது. இதுதவிர சர்க்கரைஉப்புமுதலியசிலபதார்த்தங்கள் கசியும் சுபாவத்தை உடையதாகவாக இருக்கிறது. ஆகையால் சர்க்கரை ஜலத்தில் பட்டஉடனே கசிந்து, பரமாணுக்களுக்கு இடையிலிருக்கும் சின்னரந்திரங்களிலுள்ள காற்றை அப்புறப்படுத்திவிட்டு அதில் பிறவேசிக்கிறபடியால் அந்த ஜலத்தின் ரந்திரங்களில் சர்க்கரையிருக்குமேதவிரஜலமும் சர்க்கரையும் ஏககாலத்தில் ஏகதேசத்தில் இருக்கமாட்டாது, அந்தரந்திரங்கள்கொள்ளத்தக்கதைக் காட்டிலும் அதிக சர்க்கரையை அந்தநீரில் சேர்த்தால் அப்படியதிகமாயுள்ளசர்க்கரை நீரின் அடியில்தங்கி அதினளவு ஜலம் வெளியில் வழிந்துவிடும். இரண்டுவித திரவங்களைச் சேர்த்தாலும் சாதாரணமாய் அனுபவகாசத்தத்துவம் விளங்கும். ஆகிலும் ஜலத்துடன் சிலத்திராவகங்களைக்கலக்கும்போது அந்தக்கலப்பானது அந்தஜலத்தின் அளவுக்கதிகமாயும் அவ்விரண்டிளவுக்கும் குறைந்ததாயும் யிருக்குமாகையால் இவ்விடத்தில் இந்த தர்மம் தப்பிப்போகிறதேயென்று தோன்றலாம். ஆகிலும் பதார்த்தவிக்கியான சாஸ்திரத்தைப் படிக்கும்போது இந்ததர்மத்துக்கு யாதொரு லோபமும் மில்லையென்றும் அவற்றின்பரிமாணம் குறைவதற்கு வேறே ஹெதுவுண்டென்றும் தெரியவரும்.

இரண்டாவது சாமானியதர்மம் பரிமாணமென்பதாம். பரிமாணம்அளவு. ஆகாசத்தை வியாபிக்கும்பதார்த்தங்களுக்கெல்லாம் பரிமாணமுண்டு. அதுதீர்கம், அகலம், கனம், என்று மூன்றுவகைப்படும். கனத்தையே உயரமென்றும் ஆழமென்றும் உலகத்தார் வழங்குவார்கள்!

பரிமாணத்தின் அவதியே ஆகாரமாகும். ஆதலால் ஆகாரமில்லாத பதார்த்தம் கிடையாது. மூலபதார்த்தங்களுக்கெல்லாம் நியமமான ஆகாரமும் சம்யுத்த பதார்த்தங்களுக்கெல்லாம் அனியதமான ஆகாரமுண்டு. ஜலத்தின் பரமாணுக்கள் கோளாகாரமாயும், கல்லுப்பின் பரமாணுக்கள் சதுராகாரமாயும், சிலவகைஸ்படிகங்களின் பரமாணுக்கள் திரிகோணாகாரமாயும், இன்னுமிப்படியே பலபலவிலக்ஷணமான ரூபங்களையுடைத்தாயிருக்கும். இதைக்குறித்து அதிகமாய் விரும்புவோர் பதார்த்தவிஞ்ஞானசாஸ்திரத்தை வாசிக்கவேண்டும்.

சாமவேதத்தைச்சேர்ந்த கேநே பநிஷத்து என்கிற தலவகார உபநிஷத்து.

முதல்கண்டம்.

"எதினுடைய இச்சையாலும் ஏவலா
"லும், மனது பிரவர்த்திக்கின்றது? எதி
"னுடைய ஏவலினால் ஆதிப்பிராணனுண்டா
"கிறது? எதினுடைய பிரேரணையினால் இந்
"த வாக்குக்கு உச்சாரணமுண்டாகிறது?
"எந்த தெய்வம் கண்ணுக்கும் காதுக்கும்,
"பொறிஅளிக்கின்றது, எதுகாதுக்குக்காது
"ம், மனதுக்கு மனமும் வாக்குக்கு வாக்கு
"மோ, அதுவேபிராணனுக்குப்பிராண், கண்
"ணுக்கண்ணு அதின்பொருட்டுதீர்கள்துற
"வடைந்துஇவ்வுலகத்தில் இறந்தமேல், நித்
"திய பதமடைகின்றனர். அதைக்கண்ணுவ

"து, வாக்காவது, மனமாவதுஎட்டுகிறதில்
"லை.அதைநாம்அறியோம். அதைச்செல்லும்
"வழியும் நமக்குத்தெரியாது, அது தெரிந்
"ததற்கு வேறும், தெரியாததற்குப் புறம்
"பாயும், இருக்கிறதென்று முன்னோருரை
"க்கக்கேட்டோம். எது வாக்கிலுல் விளங்
"கவில்லையோ, எதிலுல்வாக்கு விளங்குகி
"றதோ அதுவே பிரும்மமென்று நீ அறி;
"எதையாலுல் இது என்று உபாசிக்கிறார்
"களோ அதல்ல. எதை மனதிலுல் சிந்திக்
"கக்கூடாதோ, எதிலுல் மனது சிந்திக்கிற
"தென்று சொல்லுகிறார்களோ அதுவே
"பிரும்மமென்று நீ அறி. எதையாலுல்இது
"என்று உபாசிக்கிறார்களோ அதுவல்ல.
"எதைக் கண்ணுல் காணக்கூடாதோ எதி
"லுல் கண்கள் காண்கின்றனவோ அதுவே
"பிரும்மென்று நீ அறி. எதையாலுல் இ
"துஎன்று உபாசிச்சிறார்களோ அதுவல்ல.
"எது காதிலுல் கேட்கப்படவில்லையோ, எ
"திலுல் இந்த காது கேட்கின்றதோ அது
"வே பிரும்மமென்று நீ அறி. எதை இதுஎ
"ன்று உபாசிக்கிறார்களோ அதுவல்ல. எது
"சுவாசத்திலுல் ஜீவிக்கவில்லையோ எதி
"லுல் மூச்சு சுவசிக்கிறதோ அதுவேபிரும்
"மமென்றுநீ அறி. எதை இது என்று உபா
"சிக்கிறார்களோ அதுவல்ல"

இரண்டாவதுகண்டம்.

"(பிரும்மத்தை) நான் நன்றுய் அறிவே
"னென்று நீ நினைப்பாயாகில் நீ பிரும்மத்
"தினுடையசுவரூபத்தை அறிந்ததும்,தேவ
"தைகள் விஷயத்தில் அதின்ரூபத்தை நீ
"அறிந்ததும் நிச்சயமாய் வெகு சுவல்பந்
"தான். ஆகையால் யோசிக்கத்தக்கது.
"(எனக்கு) த்தெறிந்ததாய் பாவிக்கிறேன்
"நான் நன்றுய் அறிந்ததாய்த்தோன்றவில்
"லை. எனக்குத் தெறியாதென்றும் நானறி
"யவில்லை. எனக்குத் தெறியவில்லையென்
"றுநான் அறியாமையை நம்மில் யார் அறி
"வாரே அவன் அதை அறிவான் நன்றுய்
"த் தெறியாதென்று நினைக்கிறவன் அறி
"வான். தெரியுமென்பதாய் பாவிப்பவன்
"அறியான், (பிரும்மம்) விசேஷமாய்த்தெ
"ரியுமென்பவர்களுக்குத் தெரியாது. தெரி
"யாதென்பவர்களுக்குத் தெரியும். மனது
"லுல் (எட்டத்தக்கதென்று) அறிபவன் அ
"றிருதலுவான். ஆத்மாவால் வீரியத்தை
"யும், ஞர்னத்திலுல் நித்திய பதத்தையும்
"அடைவான். இப்பிறப்பில் அறிந்தால் பி
"ன்பு சத்தியமுண்டாகும் இப்பிறப்பில்
"அறியாவிட்டால் பெருந்துன பமுண்டா
"கும். சகல பூதங்களிலும் (பிரும்மத்தை)
"ப்பார்க்கிற தீரர்கள் இவ்வுலகத்தைவிட்டு
"நித்திய பதமடைவார்கள்."

மூன்றுவது கண்டம்.

"தேவர்களையும் பொருட்டு பிரும்மம் ஜ
"யித்தது, பிரம்மத்தினுடைய ஜயத்திலுல்
"தேவதைகள் மகிமையடைந்தார்கள். அவ
"ர்கள் இந்த ஜயம் நம்மதுதான், மகிமை
"நம்மதுதான் என்றெண்ணினார்கள் அவர்
"களுடைய அந்தஎண்ணத்தை அறிந்து,
"அது அவர்கள்முன்பாக ஆவிர்பவித்தது.
"அது பூஜார்கமாவென்பதை அவர்களறிய
"வில்லை. அவர்கள் அக்கினியைப்பார்த்து,
"ஓஜாதவேதஸேஇது பூஜியமா என்ன அறி
"யென்று சொல்ல அவன் அப்படியே யெ
"ன்று அதினிடததுக்கு ஓடினான். அது நீ
"யாரென்று கேட்க அவன் நான் அக்கினி
"நான் ஜாதவேதஸ— என்று விடையுரைத்
"தான். இப்படிப்பட்ட உன்சக்தி யென்ன
"வென்று பிரும்மம்கேட்க, அவன் பூமியி
"லுள்ள அனைத்தையும் நான் எரித்துவிடு
"வேனென்றுன்பிரும்மம் ஒறு திருணத்தை
"ப்போட்டு இதை எரிபார்ப்பாமேன்று
"சொல்ல அவன் யாவத்சக்தியுடனும் பிர
"யத்தனப்பட்டும் அதை யெரிக்கமாட்டா
"மல் திரும்பிச்சென்று இது பூஜார்கமோ
"என்னவோ நான் அறியக்கூடவில்லையெ
"ன்றான். பின்பு அவர்கள் வாயுவைநோ
"க்கி.ஓவாயு இதுபூஜியமாயென்ன அறியெ
"ன்றார்கள், அவன் அப்படியே யென்று ஓ
"டினான். பிரும்மம் நீயாயென்றுகேட்க;அ
"வன் நான் வாயு நான் மாதரிசுவ என்றுப
"தில்சொன்னான். இப்படிப்பட்டஉன் சக்
"த்தி யென்னவென்றுகேட்க, அவன் நான்
"பூமியிலுள்ள சகலத்தையும் பறக்கவடிப்
"பேனென்றான். பிரும்மம் இதைப்பறக்க
"டி பார்ப்பொமென்று ஒரு திருணத்தை
"வைக்க அவன் தன்பலங்கொண்டவரை
"யில் முயன்றும் அதை அப்புறப்படுத்தமா
"ட்டாமல்ஓடிப்போய்அது பூஜியமோ என்
"னவோ நானறியக்கூடவில்லை யென்றான்
"பிறகு அவர்கள் இந்திரனைப்பார்த்து, ஓய்
"பகவானே இது பூஜியமோ என்னமோ அ
"றியென்றார்கள். அவன் அப்படியே யென்
"று பிரும்மத்தினிடத்தில் ஓட அது அந்தர்
"த்தானமாகி விட்டது. பிறகு ஆகாசத்தில்
"மிக ஒளிபொருந்திய ஹைமவதியாகிய உ
"மையென்பவளைக்கண்டு இதென்ன பூஜி
"யமாவென்று அவன் கேட்டான்."

நான்காவது கண்டம்.

"அவள் அது பிரும்மமென்றும் பிரும்ம
"த்தின் இந்த ஜயத்திலுல் நீங்கள் மகிமை
"யடைந்தீர்களென்றும் சொல்ல அவன் பி
"ரும்மத்தையறிந்தான்இதனுல்தான் அக்

"கினி, வாயு, இந்திரன், இவர்கள் இதரதே
"வர்களைக் காட்டிலும் சிறந்தவராஞர்கள்.
"ஏனெனில் அவர்கள் பிரும்மத்துக்கு சமீ
"பதமாளாய் அதை முதலில் பிரும்மமெ
"ன்று அறிந்தார்கள் இதினுல்தான் இந்தி
"ரன் மற்றதேவர்களைக்காட்டிலும் சிறந்
"தவனுனன். ஏனெனில் இவன்பிரும்மத்து
"க்கு சமீபதமனுகி அதை முதலில் பிரும்ம
"மென்று அறிந்தான். அதைப்பற்றிய உப
"தேசமிது. அது மின்னல்போல் ஜுவலி
"த்து கண்ணினின்றும் மறைந்தது. இவ்வ
"ளவுதெவர்கள் விஷயத்தில் இனி ஆத்ம
"விஷயத்தைப்பற்றி மனது அதைஎட்டுகி
"ன்றது. அதை மனதினுல் தியானிக்கிறுன்.
"இதை நிரந்தரமான மனதினுல் அறிகிரு
"ன். இதுதான் அதுக்கு(ஜீவனுக்கு) பூஜிய
"ம். அதைபூஜியமென்று பூஜிக்கவேண்டிய
"து. இதை அறிந்தவனிடத்தில் சகலபூதங்
"களும் பிரீதிவைக்கிறதகள் ஓய் உபநிஷ
"தைச்சொல்லும். உபநிஷத்தைச்சொல்லி
"யாயிற்று பிரும்மத்தைப்பற்றியஉபநிஷத்
"த்தைச்சொன்னேம். இதின் (சிந்திக்கு)தப
"சும், தமமும் கர்மமும்(சாதனங்கள்)வேத
"ங்களும், சர்வ அங்கங்களும் அதற்கு ஆதா
"ரம். சத்தியம் அதற்கு ஆகரம் இவ்விதமாக
"இதை அறிந்தவன் பாபத்தைவிட்டு அநந்
"தமானவும் பிரகாசமானவும், சுவர்கத்தில்
"வாழ்வான். சுவர்கத்தில்வசிப்பான்."

இந்த உபநிஷத்து பெரும்பாலும் மற்ற உபநிஷத்துக்களைப் போலவே ஆசாரிய சிஷிய சம்வாத ரூபமாய் வெளியாயிற்று.

இந்த உபநிஷத்து முதல்கண்டம் பிரும்ம சுவரூபத்தை விசாரிக்கிறது. இதின்கருத்தெலலாங் கூடி பரப்பிரும்மானது கண் வாய், மூக்குச் செவி முதலிய இந்திரியங்களுக்கு விஷயமல்ல வென்பதும், கேவலம் மனசினுல் மாத்திரம் தியானிக்கக்கூடிய தென்பதும், பிரும்மத்தீன் சிருஷ்டியிலடங்கி, நம்ம இந்திரியங்களுக்கு விஷயமாகியும், சாதாரண ஜனங்களால்உபாசிக்கப்பட்டும், இருக்கிற யாதொன்றும் பிரும்மமல்ல வென்பதும், இந்த பிரும்மஞானுநந்தானுபவத்தின் பொருட்டு, இந்திரிய வியாபாரங்களால் ஜனிக்கத்தக்க நசுவரமான இன்பத்தைத் தைவிடுவோர், நித்திய விபூதியை அடைந்து அழிவற்ற அநந்தமான ஆநந்தத்தை அடைவார்களென்பதுமேயாம்.

இரண்டாம் கண்டமானது பிரும்மஞானத்தை விசாரிக்கின்றது. முதல்கண்டம் கேவலம் பிரும்ம சுவரூபப் பிரதிபாதகமாயிருக்கிறது. இரண்டாவது கண்டம் பிரும்மத்தினுடைய அநந்தமானவும், அகிர் வாச்சியமானவும் நித்தியகலியாண குணங்களின்மஹிமையை, நம்முடைய அப்பியோஜகத்துவத்துடனும், அஸமர்த்தையுடனும், ஒப்பிட்டு, ஸ்தூலமாய் விசாரிக்கின்றது. இதின் முடிவெல்லாங்கூடி, பரப்பிரும்மத்துக்குச் சமமான ஞானத்துடனும், அநந்த புருஷாய சுடனும் கூடியிருந்தாலும், நம்மால சொல்லியாவது நினைத்தாவது முடியமாட்டாத. அதினுடையசுவரூப, சுவபாவ, குண ஆநந்தாதிகளை முற்று மறிவே னென்பவன் சற்றுமறியானென்பதும், கடல்களுக்கெல்லாம் கடலாகிய அதினுடைய திவியமங்கள குணசமுத்திரக்கரையில் ஒரு கைமணலேதான் நாம் அள்ளினேமென்கிற ஞானத்தையுடையவனே அதை முற்றும்அறிந்தவனென்பதுமாம்.

"தேவராய்த் தேவர்க்குந்தெரியாத ஒளியுருவாய்" உள்ளதென்கிற பொருளை ஒரு உபாக்கியானத்தினுல் இதின் மூனறு நாலு கண்டங்களில் வெளியாக்கி யிருக்கின்றது. பரப்பிரும்மத்தினுடைய அபரிமித கலியாணகுணங்களில் ஒவ்வொன்றையும் ஒரு தேவதையாக உத்பிரேக்ஷித்து சொல்லப்படுகிறதென்றும், தேவதைகளென்கிற பிரதக்கான பூதங்களில்லையென்றும், மற்ற உபநிஷித்துக்களையும் வேதங்களையும் படித்துப்பார்க்கும்போது ஸ்பஷ்டமாய், விளங்குமாகையால் பிரகிருதத்தில் நாங்களதை நிரூபிக்க வேண்டிய ஆவசியகமில்லை. இவற்றின் பொருளெல்லாங்கூடி நம்மைப்போல் ஸ்தூல சரீரங்களையும், இந்திரியங்களையும், உடைத்தாயிராமலும், பிரும்மத்துக்கே அவயவங்களாயுமிருக்கிற, அதினுடைய குணங்களிலொவ்வென்றுக்குமே பிரும்மத்தன் விஷயத்தில் பரிபூர்ணஞானம் ஜனிக்கவில்லையென்றும்." அல்பபுத்தியும் சாதனங்களுமுடையநமக்கு அபரிமிதஞான முண்டாகமாட்டாதென்பதை முதிகனியாயமாக விருக்கின்றதல்லவா.

இதின் மூன்றுவதுகண்டம் ஆரம்பத்தில் "பிரும்மஜயித்தது" என்கிற வாக்கியத்தைக்கொண்டு அது அசுராளை ஜயித்ததென்று சிலரும், அஞ்ஞானத்தை ஜயித்ததென்று சிலரும், இன்னும் பலவிதமாகபலரும், பொருள்செய்வார்கள். ஆகிலும் இதுவாஸ்தவமாய் நடந்ததையல்லவென்றும் பிரும்மத்தின் மகிமையை ஒருவாறு தெரிவிக்க ஆசாரியனுடைய புத்தியினுல் கற்பிக்கப்பட்டதென்றும், வேதங்களின் இன்னஞ்சில பாகங்களில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருப்பதால் விளங்கும். வேதத்தில் வழங்கும் சுவர்கமெனகிறபதம் மோக்ஷத்திலும் வேருனதல்ல.

நம்முடைய அளவற்ற வேதங்களின் அதி சுவல்ப்பபாகமாகிய இந்தஉபநிஷத்தினுலே

யே, நம்முடைய மதத்தின் விஷயத்தில் கிறிஸ்துமதத்தார் சொறியும் கிந்தைகள் அநியாயமாயும் நிராதாரமாயு மிருக்கிறதென்றும், இதுகளை கவனிக்காது வெளியில் தத்துவத்தைத் தேடப்போவோர் அளவற்ற பொருளிருக்க அரிப்பரிக்கப்போவது போலுமென்றும்; அனைவருக்கும் விசிதமாகுமாகையால் நாங்கள் எங்கள் சக்திக்கு இயைந்தவரையில் வேதங்களின் அர்த்தங்களை ப்பிரசுரப்படுத்துகின்றோம்.

லார்டு பேகன் வியாசம்.

தர்ஜமா.

உயர்பதவி.

அதிகாரிமுவ்விதத்தில் அடிமை; அரசர்க்கடிமை; கீர்த்திக்கடிமை; வேலைக் கடிமை. ஆதலால் அவன் தேகமாவது செய்கையாவது, காலமாவது, அவனுக்கு சுவாதீனமில்லை. அதிகாரத்தைக்கோரி, சுவாதந்திரியத்தை இழப்பது என்றுல், அயலார்மேல் அதிகாரத்தை விரும்பி தன்மேல் தனக்குள்ள அதிகாரத்தை இழப்பது வெகுவிந்தை. உயர்பதவி யேறுதல் கடினம்; கஷ்டத்திலுல் மனிதன் அதிககஷ்டத்தை யடைகின்றுன். சிலவிசை அதை அடையும்வழி இழிவாம்; ஆகலின் மனிதன் தாழ்மையிலுல் மேன்மை யடைகின்றுன். இருப்போ நிலையல்ல; தவறிலுல் அதோகதி அல்லது அப்பிரசித்தம், இதிலும் கொடியதில்லை. அதிகாரத்தை விட் உசிதமானபோது இஷ்டமிராது; இஷ்டமுள்ளபோது சக்தியிராது. சிறியோர்பழிக்கக்கண்டும் தெருத்திண்ணையிலிருக்க விரும்பும் பட்டணத்துக்கிழவரில் சிலரைப்போல் நிழலை அபேக்ஷிக்கும் பிணிமூப்பிலும்கூட மனிதன் அப்பிரசித்தியை சகியாமல் அதிகாரத்தை விரும்புவான். உண்மையாய் உயர்பதவி யுள்ளவன் அயலார் சொல்லைக்கொண்டே தான் சுகியென்று நினைக்கவேண்டும். தானே ஆராயப்புகில் அதுதோன்றுது. அவன் பதவியை அயலார் விரும்புவதிலுல் அவர்கள் அபிப்பிராயத்தில் அவனுங் கலப்பானுயின், அவனிடத்தில் சுகமில்லாவிட்டாலும் கேள்வியிலுல் மாத்திரம் சுகியாகவிருப்பான். ஏனெனில் மனிதன் தன் குற்றங்களைக் காண்பதில் கடைவனுயினும், தன்துக்கங்களைக் காண்பதில் முதல்வனுயிருப்பான். உயர்பதவியிலுள்ளவன் தனக்குஅன்னியனுகி விடுகின்றமையால், உலகவேலைகளைப் பார்ப்பதில் தன்தேகம்மனுஷ்ய சௌக்கியங்களை கவனிக்க அவகாசமிராது. உயர்பதவியில்தான் நன்மைக்கும் தீமைக்கும் அவகாசம். இவற்றுள் பிந்தியது சாப்பலமாகும்; தீமையில் இச்சையில்லாமையே உத்தமம்; சக்தியில்லாமை மத்திமம். நன்மையைச் செய்தலே சர்வசாம்பிராதிபமாம்; ஏனெனில் நல்லதினைவு கடவுளுக்கினிப்பெனினும், மனிதர் மட்டில் அதை நிறைவேற்றுவிடில் அது நல்லளவிலுஞ் சிறந்ததாகாது. ஆனுல் அதை செய்தல் பதவியும் அதிகாரமுமின்றிமுடியாது. மனிதன் முயர்ச்சிக்குப்பயன் புண்ணியமும், சிருஷ்டிதமும்; அவனேய்க்குப்பயன் அவற்றின் ஸ்மருணம்; ஏனெனில் மனிதன் கடவுளின் லீலையைப் புரிய வல்லோனெனில், கடவுளின் ஒழிவையும் அவன் அடையவேண்டும். உன்வேலை முறையில் நல்லோர் சரிதையை கவனி; ஏனெனில் அனுகமமே நிதபடமாம். சிலகாலங்கழித்து உன்சரிதையை யாய்ந்து தாக்ஷணியத்தைவிட்டு, நீ முன்செய்தனவே நலமலவோ வெனப்பார். உன்பதவியிலிருந்து தவறினேர். சரிதையும் கவனி; இதனுன் கருத்து அவர்களை இகழ்ந்து உன்னைப் புகழ்ந்துகொள்ளாது, அவர்கள் தவறியவழியில் நின்று விலகவே யாகட்டும். சிரிருத்துவதில் உன் பிரதிஷ்டையும் கூருதே. முன்னுரையும் முன்னுளையும் பழியாதே. நீதிகளைச்சொல்வது மன்றி அனுஷ்டிக்கவும் வேண்டும். ஏற்பாடுகளின்ஆதி உத்தேசத்தை யறிந்து அவற்றிற்பிற்காலம் உண்டான கெடுதிகளையும்; பூர்வகாலத்தில் இன்னவை உத்தமம், பிரசிருத்தத்தில் இன்னவை உசிதம்.என்பதையும்தேறு. நிநியதாசாரருகில் உலகத்தாருன்னிடத்திலே திரபார்க்கத்தக்கவை இன்னதென்று அறிவார்கள். சாதனைச் சொல் பேசாதே. நீவிதியை விட்டு விலகும்போது அதற்கு ஹேதுவை வெளிப்படக்கூறு. உன்அதிகாரவலுமையைக்கூருமல் உன்பதவியின் பாத்தியங்களைக்காத்து காரியாம்சத்தில்மவுனமாய்ச் செலுத்து. உன்கீழுள்ளோர் பாத்தியங்களையும்ரகூடி. உள்விவரவுகளில் நுழைவதினும், பொதுவுத்தரவு செய்தல் கவுரவமெனக்கொள். உன் அதிகாரமுறைமையில் உதவியும் யோசனையுந் தேடி அங்கீகரி. அயலார் செய்திசொல்லவந்தால வர்களைக்கோள்காரரென மறுக்காமல் அவர் சொல்லின் சாரத்தை கிரஹி. அதிகாரத்துக்குறிய குற்றங்கள் ஆவசியம், பரிதானம், கடிமை, தாக்ஷணியம், இந்நான்குமாம்; ஆலசியத்தை நீக்க, சுலபனுயும், நியதகாலனுயிருப்பதுமன்றி ஆலசியக மல்லாது; தொட்டவேலையை முடியாமல் மற்றொன்றைத் தொடாதே.பரிதானத்தைப்பற்றியோவெனில் வாங்குவோன் கைகளைக்கட்டுவதே போதாது, கொடுப்போர் கைகளையும் கட்டவேண்டும். பாரிசுத்தியத்தை யாசரிப்பதிலுல முதற்பயன் கிடைக்கும், பரிதானத்தைப் பகைப்பதிலுல் மற்றொன்று கிடைக்கும். கும்

நமாத்திரமன்றி ஜயமும் நீக்கு ஸ்தைரிய மில்லாது, தெளிவான காரணமின்றி மாறி னால் லஞ்சம் வாங்குவதாய் சந்தேகம் ஜனி க்கும். ஆகலின் நீ வீதியினின்றும் விலகும் போதெல்லாம், அப்படி விலகுவதையும், அ தற்குரிய காரணத்தையும் வெளிப்படவுரை. வேறொரு யோக்கியதை யில்லாத ஆசிரத னிருப்பின் அவனை லஞ்சத்துக்குக் கள்ளவழி யெனக் கொள்வார்கள். கடிமையோவெனி ல, இது அகத்தியமற்ற அதிருப்திக்குக்கார ணம். கண்டிப்பினால் பயமுண்டாகும்; கடி னமையினாலோ பலகையுண்டாகும். அதிகாரமு னமையிற் செய்யும் ஸ்வரூபசிக்ஷையும், நி ன்மையாயும், ஹாசியமாயு மன்றி கவுரவமா யிருக்கவேண்டும். தாக்ஷணியமோவெனில், லஞ்சத்தினுங்கொடிது. ஏனெனில் லஞ்சம் அபூர்வமாய் கிடைக்கும். சிபார்சுக்குள்படி ன், அது எப்பொழுதும் வரும். "தாக்ஷணி யமுடைமை நலமன்று; அதையுடையவன் ஒரு பிடிசோற்றுக்கு விதியைக்கடப்பான்" என்று ஸாலமன் சொல்லியிருக்கிறான். "இ டம் ஆளைக்காட்டும், சிலரை நல்லோராயு ம், சிலரைக் கெட்டோராயுங் காட்டும்." எ ன்கிற பழமொழி உண்மையே. உயர்பதவி யில் சர்மையடைவதே நற்குணங்களுக்குச் சிறியானகுறி; ஏனெனில் நற்குண நற்செய் கைகளுக்கிடம் உயர்பதவியே. இயற்கையில் பொருள்கள் நிலைக்கு வேகமாயும், நிலையில் நிதானமாயும், சலிப்பதுபோல, பிரயத்தன த்தில் ஆதுரமாயும், வேகமாயுமுள்ள நற்கு ணம், பலத்தில் நிதானமாயும், சாந்தமாயுமி ருக்கும். உயர்பதவிக்கு சுற்றுவழியேயன்றி வேரில்லை. இருக்ஷியிருந்தால் ஒருவருடன் சேர்ந்து முயன்று, பதவியடைந்தமேல் நடு நிலைமை கொள்ளு. உன் முன்னேற்கு றி த்து நன்றும், பக்ஷமாயும் பேசு. இல்லை னில், உன்னுளைச்சுப்பிரகு அக்கடலனக்கு க்செல்லாம். கூட்டாளிகளிருப்பின் அவர்க ளே கவுரவப்படுத்து. அவர்கள் கோரும்போ து அவர்கள் வரவைமறுக்காது. அவர்கள் எ திர்பாராத பொழுதும் வரவழைத்து ஆதரி. உன் அதிகாரத்துக்கு வெளியிலும், உன்ப தவியை நினைக்காதே. "இவன் இடத்திலிரு க்கும்போது வேறுளாகிறான்" என உலகத் தார் வழங்கட்டும்.

பழமொழிகள்.

அன்புளார்க்குண்டு இன்புளார்கேண்மை.

அப்பன்வெட்டியகிணரென்று அதில்விழு ந்து சாகலாமா.

ஆக்கப்பொருத்த உனக்கு ஆறபொறுக் காதோ.

ஆசை வெட்கமறியாது.

ஆசையுள்ளளவும் அலைச்சலுமுண்டு.

ஆடுநனைகிறதென்று ஓநாயழுகிறதாம்.

ஆய்ந்தோய்ந்துபாராதவன் தான்சாவக் கடவான்.

ஆருமற்றதேதாரம் ஊரிலொருவனேதோ ழன்.

ஆவாளையிலையும் ஆபத்துக்குதவும்.

ஆளுக்கொருகுட்டுகுடினால் அடியேன் தலைமொட்டை.

ஆறினகஞ்சி பழங்கஞ்சி.

வர்த்தமானக்குறிப்பு.

லோகோபகாரம்.

செல்வப்பொருளுள்ள விடத்தில் கல்வி ப்பொருளும் கலந்திருந்தாலன்றி அது பரி மளிக்கமாட்டாதல்லவா? நமது இராஜதா னியில் அனேக ஜமீந்தார்களுண்டாயிரு ந்தும் பொதுப்பய னின்னதென்றும், உண் மையானப் பிரதிஷ்டை யின்னதென்றும், அறிந்து அதற்குத்தக்கபடி நடப்பவர் சில ரே. நவராத்திரிதோறும் பண்டிதர்களுக்குச் சன்மானஞ்செய்து ஸமஸ்கிருதபாஷையை ஜீர்ணைத்தாரணம்செய்து வரும் வெங்கட கிரி ஜமீன்தாருடைய கீர்த்தி அவரைச்சுத் தியுள்ள இரண்டுமூன்று ஜில்லாக்களில் பிரசித்தமாக விருக்கிறது. இராமநாதபுரம் ஜமீன்தார் இவ்வாறு நவராத்திரிதோறும் பண்டிதர்களுக்கு சன்மானம் செய்வதுமா த்திரமேயன்றி, சிலகாலத்துக்குமுன் மது ரையில் வைத்தியசாலைக்காக உ0000- ரூபாயும், பெண்பிள்ளைகள் பாடசாலைக்காக உரு00- ரூபாயும், கஞ்சியில் ஹானரேபில் வ. சடகோபாசாரியார் சமஸ்கிருத பாடசா லைக்கு க0000- ரூபாயும், வைத்தியசா லைக்கு க000-ரூபாயும் கொடுத்ததுமன் றி, இன்னும் பலவித தர்மங்களுஞ்செய்து வருவது சென்னைப்பட்டணத்துக்குத் தெ ற்கிலுள்ள அனைவருக்கும் நன்றுய்த்தெரிந் திருக்கிறது. இந்த ஜமீந்தாருடைய கல் வியையும், அவர்மந்திரியுடைய கல்வியை யும் சேர்த்து யோசித்தால் சர்க்கரைப்பந் தலில் தேன்மாரி பெய்ததுபோல் தோன் றும். இவர்கள் கீர்த்தியெல்லாம் மறைக்க த்தக்க செய்கைகளையுடைய விஜயநகரம் ம ஹாராஜாவைக்குறித்து முக்கியமாய்க் கொ ண்டாடவேண்டியிருக்கிறது. சென்ற பத் துவருஷகாலமாய் ரோட்டுகள், ஏரிகள், குளங்கள் முதலியவற்றை உண்டாக்குவ தினும், மராமத்து செய்விப்பதிலும் ல க்ஷம் லக்ஷமாய் இவர் செலவழித்தது எல் லாருக்கும் தெரிந்திருக்கிறது. விஜயந க ரத்தில் ஒரு ஔஷதசாலையும் ஏழைகளுக் குப் பிரசவசாலையும், கவர்ன்மெண்டு ஜில்

லா ஸ்கூல்களுக்குச் சமமான ஒரு பாடசாலையும், அவர் ஜமீந்தாரியிலுள்ள முக்கிய பட்டணங்கள்தோறும் பாடசாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார். கடைசியாக விஜயநகரத்திலுள்ள தர்ம வைத்தியசாலையிலிருக்கும் நோயாளிகளில் ஏழையாயுள்ளவர்களின் ஜீவனுர்த்தமாக ஒரு பெருந்தொகையளிக்கவும், அவருடைய கீர்த்தி பங்காளம்வரையில் பரவி கவர்னர்ஜனரல் அவருக்கு மஹாராஜாவென்கிற பிருதுப்பெயரை அளித்தாரென்று சொல்ல நாங்கள் அடைந்த சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது. இதினுல் வரும் கவுரவம் நமது தேசத்தாருதேயன்றி அந்த மஹாராஜாவுதல்ல. கவர்னர்ஜனரல் இன்கவுன்சலில் இவர் ஒரு மெம்பராக ஏற்படுத்தப்பட்ட சங்கதி எல்லோருக்கும் தெரிந்திருக்கிறதல்லவா. நமது தேசத்திலுள்ள மற்ற ஜமீன்தாரர்களும் சுத்தமாய் தர்மம் செய்யாமலிருக்கவில்லை. ஆனுல் தர்மங்களின் தாரதம்மியம் அவர்களுக்குத் தெரியாமையால் அவர்கள்செய்வதும் பரிமளிக்காமல் போகிறது. வித்தியாதர்மத்துக்குச் சிறந்தது ஒன்றுமில்லை. நோயாளிகளுக்குச்செய்யும் உபகாரம் அதற்கிரண்டாவதாம். மற்ற தர்மங்கள் பலவுண்டெனினும் இவற்றிற்கு ஒப்பாகாதென்பது உள்ளங்கைக் கனியாகவிருக்கிறது. இதெல்லாம் எப்படியிருந்தபோதிலும் நமது ஆத்மதர்மம் ஒன்றிருக்கிறது. அதை நிறைவேற்றுவதினுல் விளையும் கீர்த்தியை எந்த மகாபுருஷனுக்காகக் கடவுள் வைத்திருக்கிறாரோ தெரியவில்லை. சமஸ்கிருதபாஷை நாளுக்குநாள் மலினமாவதை எல்லாரும் கண்டிருந்தும் அதை ஜீர்ணுத்தாரணம் செய்யவேண்டுமென்னும் எண்ணம் இதுவரையில் ஒருவர்க்குமுண்டாகவில்லை. சாஹித்திய சாஸ்திராதிகள் படிக்கத்தக்க சிறந்த பாடசாலைகளை யேற்படுத்தி சுபோதகமான கிரந்தங்களை யுண்டாக்கி, நமது தாய்பாஷையை விருத்திசெய்ய மனமிருந்தால், எந்த ஜமீந்தாரரால் முடியாது? இகத்தில் புகழையும், பரத்தில் நல்லகதியையும் அளிக்கத்தக்க இந்த நற்செய்கையை தங்கள் தங்கள் சக்திக்குத் தக்கபடி சகல ஜமீந்தாரர்களும் யத்தனித்து முடிப்பார்களென்று நாங்கள் வெகு ஆவலுடன் கோருகிறோம்.

லெஜிஸ்லேடிவ் கவுன்சல்.

கல்கத்தா, சென்னபட்டணம், பொம்பாய், இந்த மூன்று இராஜதானிகளிலுமுள்ள ஸ்மால்காஸ் கோர்ட்டார் இதுவரையில் ரூ00-ரூபாயிக்கு உள்பட்ட வியாச்சியங்களைப் பிடித்துத் தீர்மானித்துவந்தார்களல்லவா. கவர்னர்ஜனரல் இன்கவுன்சலவர்களால் விதிக்கப்பட்ட கஅசுசஎடு த்திய உசு-வது ஆக்ட்டினுல் மேற்படி கோர்ட்டாருக்கு க000-ரூபாய் வரையில் வியாஜியம்பிடிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் அந்தக்கோர்ட்டுகளில் பாரிஷ்டர்களும், வக்கீல்களும், அட்டர்னிகளும், ஹாஜராகி வாதித்துவந்த கேசுகளில் ஜயித்த கக்ஷிக்காரனுக்குத் தோற்றவனிடத்திலிருந்து பிளீடர் பீசுக்காகக் கோர்ட்டுசெலவில் கூடிவந்து கொண்டிருந்தது. இந்த ஆக்ட்டில் பாரிஷ்டர்களை வைத்துக்கொள்ளுகிறவர்களுக்கு இவ்வளவுபீசும், அட்டர்னிகளை வைத்துக்கொள்ளுகிறவர்களுக்கு இவ்வளவுபீசும் கோர்ட்டுச்செலவில் கூடிவருமென்று விதியேற்பட்டிருக்கையில் வக்கீல்களைக்குறித்து யாதொன்றும் சொல்லவில்லை. இவ்வாறு இந்தச் சட்டம் பிறந்ததற்கு ஹேது இன்னதென்று தெரியவில்லை. ஹைகோர்ட்டுக்காக சீமை மஹாராணியவர்களனுப்பிய சார்ட்டரில் பிளீடர்களில் மூன்று தரகதி யேற்படுத்தி முதல் தர்கதி பாரிஷ்டர்களென்றும், இரண்டாவது வக்கீல்களென்றும், மூன்றுவது அட்டர்னிகளென்றும், பாரிஷ்டர்கள் பேசமாத்திரம் கூடுமென்றும், அட்டர்னிகள் ஹாஜராகி வியவகாரத்தை நடத்தமாத்திரம் கூடுமென்றும், வக்கீல்கள் இரண்டையும் செய்யக்கூடுமென்றும், விதித்திருக்கிறது. ஆகையால் வக்கீல்களுக்குக் கீழும் மேலுமிருப்பவர்களைக்குறித்து ஏற்பாடுசெய்தவர்கள் வக்கீல்களைக்குறித்து மாத்திரம் மறந்துபோயிருப்பார்களென்று நினைக்கக் கூடவில்லை. யோக்கியதைக் குறைவோ என்றுல் ஹைகோர்ட்டில் வாதிக்கத்தக்கவர்களுக்கு ஸ்மால் காஸ்கோர்ட்டில் வாதிக்கத் திறமையில்லையென்பார்களா. இதையெல்லாம் யோசிக்குங்கால் ஹிந்துக்களாய்ப் பிறந்திருப்பதுதவிர வேறே அஸமர்த்தையினுல் வக்கீல்கள் நீக்கப்பட்டார்களென்று நினைக்கக்கூடவில்லை. சார்ட்டர் ஒருவிதமாகவிருக்கையில் ஹைகோர்ட்டு ஜட்ஜுகள் ஒருவிதமாய் நடத்தத்துணிந்தபோது அவர்களுக்குச் சட்டம் பிறப்பிக்க அதிகாரமுள்ள இந்தியா லெஜிஸ்லேட்டிவ் கவுன்சலார் எப்படிதான் செய்யக்கூடாது. முன்னெருக்கால் சுசவனுக்குக் களிமண் கட்டளையிடுவதாவென்றெருவன் ஹிந்துக்களைப் பார்த்துக்கேட்டான். அதை இப்போது நினைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

வால்நகூத்திரம்.

பிரான்சுதேசத்திலிருந்து வந்த ஒரு கோளசாஸ்திரி கஅசுருஷ்த்தில் ஒரு வால்நகூத்திரம் தோன்றுமென்றும், அது பூமிக்கு அதிசமீபத்தில் செல்லுமென்றும், ஒருவேளை பூமியுடன் ஒட்டிக்கொண்டாலும் ஒட்டிக்கொள்ளுமென்றும், அப்படிக்கில்லாவிட்டால் பலநாள் இரவில்லாமல் பகலாகவே யிருக்குமென்றும் சொன்னதாய் ஒரு வதந்தி யுண்டாயிருக்கிறது. இதுஉண்மையாயிருக்கு மென்று நினைக்கக்கூடவில்லை. ஏனெனில் கடவுளின் அபரிமித கருணையை யோசிக்குங்கால் இவ்வுலகத்திலுள்ள அனேவரையும், ஏககாலத்தில் அவர் அழிக்க எண்ணுவாரென்று நினைக்கக் கூடவில்லை. பூமியைக்காட்டிலும் பலமடங்கு பெரிதாயுள்ள அப்படிப்பட்ட வால்நகூத்திரம் பூமியை இடிக்குமாகில் இந்தப்பூமி பொடிபொடியாய் உடைந்துபோகும். அப்படிக்கன்றி வெகுசமீபமாய்ச் செல்லும்பகூத்தில் பூமியிலுள்ள சகலமும் எரிந்து சாம்பலாகிவிடும். ஆகையால் இப்படிப்பட்ட கொடிய சிகூஷையைக் கடவுள் நமக்கு விதிப்பாரென்று நினைக்கக்கூடவில்லை. எங்கேயாவது ஒரு பாகத்தில் பூகம்பமுண்டாவதும் பூமிவெடிப்பதும், அதிலில் இரண்டொரு கிராமங்கள் முழுகிப்போவதுமுண்டு. யுகாந்தரங்களில் பிரளயங்கள் நேரிடுவதாய்ப்புத்தகங்களில் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட பிரளயம் நேரிட்டதாயாவது, நேரிடுமென்றுவது இதுவரையில் ஒருவரும் சுவப்பினத்திலும் நினைக்கவில்லை. உலகத்திலுள்ள ஒருவர்தப்பாமல் எல்லாரும் கொடும்பாவிகளென்று நினைக்கக்கூடுமா. இதைச் சொன்னவருக்கு சித்தப் பிரமமாவதிருக்கவேண்டும். அல்லது அவர் கணிதமாவது பிசகியிருக்கவேண்டுமென்று பலர் நினைக்கிறார்கள். இதெப்படியிருந்தபோதிலும் இதைக் கேட்கும்போது ஒரு கதை ஞாபகத்துக்குவரும், ஒருக்கால் ஒருதார்க்கிகன், ஜோஷியன், வைத்தியன், பாடகன், கணக்கன் இவ்வைவரும் யாத்திரைபுரப்பட்டுப்போகையில் மார்க்கத்தில் ஓரிடத்தில் தங்கினார்கள். வைத்தியன் கறிகாய்க்காகக் கடைக்குப்போய் ஒவ்வொரு கறியையும் பார்த்து இதுபித்தம், இது வாயுவு, இதுசூடு என்று எல்லாவற்றையும் தள்ளிவிட்டு கடியவரையில் ஆரோக்கியமானது பிரண்டையொன்றுதானென்று நிச்சயித்து அதில் ஒரு சுமை வாங்கிக்கொண்டுவந்தான். நெய்வாங்கிவரப்போன தார்க்கிகன் நெய்யை வாங்கிக்கொண்டு மீளுகையில் கிருதத்துக்கு பாத்திரம் ஆதாரமோ பாத்திரத்துக்கு கிருதம் ஆதாரமோ என்கிற சந்தேகந்தோன்றி அதைப் பரிகூஷிக்கும்பொருட்டு கிண்ணத்தைக்கவிழ்க்க நெய் தரையில் கொட்டிப்போயிற்று. இலை பறித்துவரப்போன ஜோசியன் ஒரு உயர்ந்த ஆலமரத்தின்மீ தேறி மேல்கிளையைத் தாவ எத்தனிக்கையில் கெவுளி சொன்னதைக்கேட்டு இது சரியானவேளையல்லவென்று நிச்சயித்து இறங்கத்தொடங்கி ஒருகாலை கீழ்க்களையில்வைக்கையத்தனிக்கையில் யாரோஒருவன் தும்பக்கேட்டான். பிறகு தும்பும்போதுசெய்யும் வேலை வம்பாகமுடியுமென்று நினைத்து, சற்றுவெறுமைநிற்க நிச்சயித்தான். அச்சமயத்தில் ஒரு ஆந்தை சப்திக்கக்கேட்டு, ஆந்தைசொல்வது சாந்துணையும் துன்பமென்பார்களே இனி யோசிக்கலாகாதென்றெண்ணி, தறையில்குதித்து, இடுப்பையொடித்துக்கொண்டு, மரத்தடியிற்கிடந்தான். விறகுவாங்கிவரச்சென்ற கணக்கன் மார்க்கத்தில் ஓராற்றைக்கண்டு, இதில்கண்மூடியாயிறங்கலாகாதென்று யோசித்து அதின் கரையிலுட்கார்ந்தான். பிறகு அதைக்கடந்துவந்த ஒருவனே அவ்வாற்றில் எவ்வளவு ஜலம் வருகிறதென்றுகேட்க, அவன் அதில் ஜலமேதுபோவென்றான். நிமிஷத்துக்கெல்லாம் மற்றொருவனைக்கண்டுகேட்க அவன் கணைக்கால் வெள்ளம்வருகிறதென்று விடையுரைத்தான். பிறகு இன்னொருவனைக் கேட்க அவன் மாரளவுப்பிரவாகம், வருகிறதென்று பதில்சொன்னான். கடைசியில் கணக்கன் மூக்கால் மூன்றுதரம்கேட்டது போதுமென்று கணக்கிட்டு, சகிடமுழங்கால்மட்டும் வருமென்று நிச்சயித்துக்கொண்டு ஆற்றில் இறங்கினஉடனே மேல்வெள்ளம்வந்து அவனை அடித்துக்கொண்டு போகையில், கணக்குப்பிசகிப்போயிற்று, இன்னொருதடவை பார்க்கிறேனென்றுசொல்லிக்கொண்டே இறந்தான். கடைசியில் வெளியில் போனவர்களில் ஒருவரும் வராமையைக்கண்டு வெகுநேரம் காத்திருந்த பாடகன் அருகிலிருந்த செத்தைகளைக்கொளுத்தி சோறுசமைக்கத் தொடங்கினான். சோறுகொதிக்கத்தொடங்கினஉடனே அவன் தனக்குத் தெரிந்தவரையில் பலவிதமாய்த் தாளம்போட்டுபார்த்தும், கொதியோசை ஒருதாளத்துக்கும் இசையாமைக்கண்டு, இது அபதாளமாயிருக்கிறதென்று அதைஉடைத்தான்.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணிமுதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.